# கம்பனடிப்பொடி சா.கணேசன் கவிதை வரலாறு



சித. சிதம்பரம்



கம்பன் அடிப்பொடி

**சா. கணேசன்**

# கம்பனடிப்பொடி சா. கணேசன் கவிதை வரலாறு!

உ
சிவமயம்

கோவிலூர் ஆதீனம் சீர்வளர்சீர்
மெய்யப்ப ஞானசுவாமிகள் பார்வைக்கு
சித. சிதம்பரம்

*சித. சிதம்பரம்*



**சிவா பதிப்பகம்**

எண்: 140, பெரியார் பாதை,
சூளைமேடு, சென்னை-600 094
போன்: 23610810

முதற் பதிப்பு : 5.4.2009 (சா.க. நூற்றாண்டு விழா)


KAMBANADIPODI KAVITHAI VARALAARU

By: **Kavingnar CT. Chidambaram**

First Edition: 5.4.2009 (Sa. Ganesan Centunary Publication)

No. of Pages: 88

**விலை ரூ. 50.00**

Published by:
**Sivaa Pathipagam**
No: 140, Periyar Pathai,
Choolaimedu, Chennai - 600 094.
Ph: 044-23610810

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 9884712091
Printed at: Poochcharam, Chennai. Ph: 044-23610810

## சமர்ப்பணம்

**அபிசீனியா பழ. நாச்சியப்பர்**

நேதாஜி சுபாஷ் சந்திரர் நிறுவிய
ஆசாத் வங்கியின் அடிப்படை இயக்குநர்
இந்திய விடுதலைக்காக அன்னிய நாட்டில்
சிந்திய ரத்தம், கர்ச்சித்த சிங்கம்
தமிழ்க்கடல் இராய.சொ., சா.க., என்னும்
அமிழ்த மனிதர்களின் சகபயணி,
அபிசீனியா பழ. நாச்சியப்பர், என் அம்மான்
அவர்களுக்குக் கும்பிட்டுச் சமர்ப்பணம்

**உயர்திரு சக்தி. அ. திருநாவுக்கரசு**

அடுக்கடுக்காய் எனைத்துயர்
அண்டியபோது, தேற்றி
இடுக்கண்களிலிருந்து நான் மீண்டுவர
எனக்கொரு காண்டீபம் எடுத்துத் தந்தவர்,
சிறகுகள் கீழே பத்திர மாகக்
கழுகுகளிடமிருந்து காப்பாற்றியவர்,
தலைமறைவு காலச் சா. கணே சனுக்குக்
'கொரியராக' இருந்து பணிகள் செய்த
சக்தி அண்ணனின் மூத்த புதல்வர்,
கம்பன் அறநிலையில் சா.க. நியமித்த
அன்றைய உறுப்பினர், ஆக்கம் மிக்கவர்
அதியர் எனக்கு, அண்ணன் திருநாவுக்கரசு
அவர் துணை ஆச்சி விசாலாட்சிக்கு
சா. கணேசன் வரலாறு சமர்ப்பண மாமே!

# என்னுரை

கம்பனடிப்பொடி கவிதை வரலாற்றை அபிசீனியா பழ. நாச்சியப்பர், அண்ணன் சக்தி அ. திருநாவுக்கரசு ஆகிய இருவருக்கும் சமர்ப்பித்துள்ளேன். இவர்களிடம் நான் ஒரு விசித்திரமான பஞ்சாயத் திற்குப் போனேன். எனக்கு வாங்கித் தாருங்கள் என்று கேட்டுத்தான் போவது வழக்கம். என் வாழ்வில் தலைகீழ் மாற்றம். என்னிடம் இருக்க வேண்டாம் என இறைஞ்சிப் போனேன். தங்கள் நேரத்தை ஒதுக்கி பரிவு செய்தார்கள். இவர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பிப்பது என் நன்றியைத் தெரிவிக்கும் வாய்ப்பாக வாய்த்துள்ளது.

பேரறம் செய்த பெருங்குடும்பத் தோன்றல், பிழையிலா மொழிஞர், கம்பன் அடிப்பொடி காட்டிய வழியில் பீடுடன் கம்பனைப் பரவுகின்ற கருக்கடை மிக்கவர், வெற்றி குவிப்பவர், கம்பன் அடிசூடி பழ.பழநியப்பன் அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும் என்றும் உரியது.

நவீன அச்சுத்தொழில் நுட்பம் நன்கறிந்து இந்நூலை வடிவமைத்த பூச்சரத்தின் ஈடுபாட்டிற்கும் நன்றி.

கம்பன் அடிப்பொடி சா. கணேசன் நூற்றாண்டு விழா மேடையில் கம்பன் அடிப்பொடி சா.கணேசன் நூற்றாண்டுக்குழுவினரால், அருமைத் தோழர் தா. பாண்டியன் அவர்கள் இந்நூலை வெளியிடு கிறார்கள். நூற்றாண்டு விழாக் குழுவினர்க்கும், தோழர் தா.பா. அவர்களுக்கும் இதயம் குளிர்ந்த நன்றிகள்.

இவற்றையெல்லாம் சாத்தியமாக்கிய என் அண்ணன் சித.பழநி யப்பன் அவர்களுக்கும், இந்நூலை எழுதுவதைச் சாத்தியமாக்கிய எஸ்ஸார் பேருந்து உரிமையாளர்கள் என் மாப்பிள்ளை செந்தில்குமார் அவர்களுக்கும், அவர்களது நண்பர் தேவகோட்டை மு. இராம நாதன் அவர்களுக்கும், இச்செய்திகள் சேகரித்து உதவிய என் மகள் நாச்சம்மை முருகப்பன், பேத்தி முரு. வள்ளிக்கண்ணுவிற்கு நன்றிகள்.

சித. சிதம்பரம்

*30.3.2009*
*பழநியப்ப விலாசம்,*
*ப.மு.சித. வீடு,*
*முத்துப்பட்டணம் முதல் வீதி,*
*காரைக்குடி-630 001.*
*செல்பேசி: 09288500874*

# கம்பனடிப் பொடி சா. கணேசன் கவிதை வரலாறு

கார்மேனிக் கணேசனின் பெயரைக் கொண்டார்
மார்மேலே துண்டொன்றே ஆடை பூண்டார்
தேரழுந்தூர்க் கம்பனுக்கே தேராய் ஆனார்
பார்போற்றும் சா.க.வைப் பாட வந்தேன்

வியப்புடனே அவர்நோக்கி வளர்ந்த தாலும்
வயப்பட்டே அவர்பணியை வியந்த தாலும்
செயப்படினும் துயர்ப்படினும் செம்மை மாறா
உயர்பண்பை வியந்தாலும் உரைப்பேன் கண்டீர்!

சிங்கத்தை சிற்றெரும்பு பார்த்தல் போல
கங்கையினைக் கொட்டில்நீர் கண்டாற் போல
சங்கத்துத் தமிழ்முன்னர் சலசலப் பாக
நங்கணேச நாயகரை நானும் சொல்வேன்!

தாராண்ட இராமகதை தந்த கம்பன்
பேராண்ட விழாக்கண்ட பெரிய அன்பன்
நூறாண்டு காணுங்கால் நோற்ற வாழ்வை
நாராண்ட என்கவிதை நவிலப் போமா!

முப்பெரிய கவிமன்னர் மொழிந்த தாயே!
அப்பர்முதல் நால்வராதி ஆழ்வார் தாமும்
செப்பியநல் அமுதமொழி சேர்ந்த தாயே!
இப்பிரியன் மொழிக்குள்ளும் இயங்கு வாயே!

ஞாலத்தின் விழிப்பினிலே கண்தி றந்தவள்
காலத்தை வென்றிருக்கப் பண்சு ரந்தவள்
வாழத்தன் இலக்கியத்தில் வழிஅமைத்தவள்
ஈழத்தில் பன்னாட்டில் கிளை எழுந்தவள்

ஆதிமொழி என அறிஞர் ஆமோதித்தவள்
ஓதிபல மொழிக்குழந்தை உருக் கொடுத்தவள்
ஏதுமிலான் ஆர்வமொன்றால் எடுப் டுெக்கின்றேன்
வாதிடாது எனக்குள்ளும் வந்தருள் வாயே!

தியாகத்தின் கொடுமுடியை உண்மை வேட்பை
ஆகத்தன் உழைப்பதனைப் பொருளை அறிவை
தீகொத்திப் போம்வரையில் நாட்டிற் கீந்த
யாகத்தை யாப்பதுவென் தமிழின் பேறு!

அடிப்பொடியாய்த் தனைக்கொண்ட ஆன்றோர் செம்மல்
அடிசூடி வாழுகின்ற மரபும் கொண்டோர்
அடிஅடியில் அணுப் பொடியில் அணுவாய் ஆனேன்!
படிப்படியாய்ப் பேருருவன் படியக் காண்பீர்!

## பிறந்த ஞான்று

அப்போது
சூரியன் சுற்றிவந்து கூடப்
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்
பிரகடனத்தோடுதான்

கடலெல்லாம் அவர்கள்
கப்பல்களில் முற்றத்தில்
விசுவாச அலைகளை
வீசிக் கொண்டிருந்தன!

தாய்ப்பால் மறந்து
அழுக்கு வட்டியில் கொட்டிவைத்திருந்த
ஆங்கிலப் பாலை
தொங்கிய நாவால் துளாவித் துளாவி
குடித்து மகிழ்ந்தனர் - சில
குறுக்குப் பித்தர்கள்

தொன்மங்கள் பரணில் கிடத்தப்பட்டு
இங்கிலீசுச் சீமையின் எடுபிடிகள்
வளவுகளில் முகாமிட்டு
வகுப்பெடுத்தன!

பத்தொன்பதாம் நூற்றாண்டு
பரங்கியரின் நெடி அடர்ந்து
துதிபாடித் தொலைந்த பொழுதுகள்!

இடுப்பில் எடுக்கிய
இருபதாம் நூற்றாண்டு
தரையில் நடக்கத் தொடங்கி
தடுக்கித் தடுக்கி விழுந்த
சிறார்ப் பருவம் அது!

மிதவாதக் காங்கிரசில்
தீவிரவாதத் திலகர் - தன்னை
திலக மிடத் தொடங்கினார்

தூத்துக்குடிக் கப்பலில்
சுதந்திர அலை சுழன்றடிக்கத் தொடங்கி
சிதம்பரம் பிள்ளையும் சிவாவும்
ஆங்கிலேய முதலாளிகட்கு
அச்சமூட்டத் தொடங்கினார்கள்!

எட்டய புரத்தில் ஒரு
சுட்டெரிக்கும் நெருப்பு
சுப்பிரமணிய பாரதியாகக்
கவிதை ஒளிவீசிக்
காரிருளை நீக்கிக் கொண்டிருந்தது!

சிதறிக் கிடந்த தேசத்துண்டுகளைச்
சேகரித்து
ஒன்றாய் ஆக்கிப்
பிரிட்டிசார்கள்
ஆண்டு மகிழ்ந்த அந்தப் போதுகளிலும்
மாண்டு விட வில்லை

வேலு நாச்சியாரின் வீரமும்
மருது சகோதரர்களின் மறமும்
கிழவன் சேதுபதியின் கீர்த்தியும்
கட்ட பொம்மனின் கம்பீரமும்!

உலக அரங்குகளில்
லெனினியம்
உற்பத்தியானதும் அப்போதுதான்
அமெரிக்க சன நாயகத்தின்

அற்புதமான பொழுதுகள்
அந்தப்பொழுதுகள் தான்

தென்னாப் பிரிக்காவின்
தீரன் காந்தி - தன்
புன்னகைச் சுடரால் - ஒரு
புரட்சியைக் கருத்தரித்த காலம்!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்தின்
முதற்பத்து ஆண்டுகளில்
தாயின் கருவறையில் இருந்து
தமிழ் மண்ணில் விழுந்தவர்கள்
பிற்காலத்தில் சமூகத்தைப்
பெரிது பண்ணியவர்கள்!

பல்வேறு இயக்கங்களில்
படர்ந்து இருந்தாலும் - அவர்கள்
இரத்தத்தில் சுதந்திரவெறி
அடர்ந்தே இருந்தது!

ஜீவா! பி.ஆர்! பி.எஸ்.ஆர்
பசும்பொன் தேவர், காமராஜர்
வள்ளல் அழகப்பர் என்ற
வளமான பட்டியலில்
கம்பன் கொடியையும்
காந்தியப் பதாகையையும்
ஏந்திச் சிறந்த ஏந்தல்
சா. கணேசனும் ஒரு
சரித்திர அதிசயம்!

அதிகார வெறிகளுக்கு
அடங்காமை என்பது - அவர்
பிறந்த குலத்தின்
பிடிவாதம்!

ஐம் பெருங் காப்பியங்களுள்
முப் பெருங் காப்பியங்கள்
அவரது
முன்னோர்களின் வாழ்வை
முரசொலிப்பவை

ஈட்டவும் காக்கவும்
ஈயவும் தெரிந்தவர்கள் அவர்கள்!
கொள்வதுவும் மிகைபடாது
கொடுப்பதுவும் குறைபடாது
துலாக்கோல் பார்வையால்
துலங்கிய வாழ்க்கையர்!

மண்மகள் அறியா வண்ணச் சீரடிகளும்
மதுரையை எரித்த பேரிடிகளுமாய்
அழியாத் தமிழுக்கு
அடையாளம் ஆன கண்ணகிகளும்
கலைகளில் முழ்கிய
கோவலர்களும்

அமுதசுரபிகளை நிரப்பிய
ஆதிரைகளும்,
அலைந்து தேடிய அளப்பரும் செல்வத்தைச்
சூறைவிட்டுக் கோவணங்கட்டிய
பட்டினத்தார்களும்
அவர்களில் உண்டு!

அவர்கள்
மீன்களோடு போட்டி போட்டுக்
கடலோடி ஈட்டியவர்கள்,
திமிங்கலங்களைப் பார்த்துச்
சுறாக்களைச் சந்தித்துத்
திசைமாறாமல்
பாய்மரக்கப்பலேறி
பண்பாட்டைப் பரப்பியவர்கள்!

உட்புகுந்தோர் வெளிப்புகார்
பூம்புகாரை விட்டு
கொப்போடும் வேரோடும்
குடிபெயர்ந்து
இளையாத்தங்குடியில் இளைப்பாறியவர்கள்
ஒன்பதுகோயிலை உருவாக்கித்
தம்மைச் செதுக்கித் தடம்பதித்தவர்கள்!

காடுவெட்டி நாடாக்கி
ஊருணிவெட்டிக் கோயில்கட்டி
சிற்றூ ரெல்லாம் சீர்சமைத்து

உற்றபிற இனத்தோடு
உறுத்தோடு தாம் இணங்கி,
தம்மையும் காத்துத்
பிறரையும் புரிந்து
தமிழையும் காத்தவர்கள்!

மன்னர்களுக்குப் பின்னால்
சின்னாபின்ன மாயிருந்த
ஆலயத்தை எல்லாம்
கட்டிநிறுத்திக் கட்டியம் கூறியவர்கள்

வரம்புக்குள் வாழ்பவர்கள்
அறம்புறள வேண்டாமென
அரிச்சுவடி கற்றவர்கள்

''தர்முமிகு'' வாழ்வுத்
தனவணிக குலத்தினுள்
கரியமுகக் யானைக்கன்றைக்
கடவுளாக்கி வழிகாணும்
பிள்ளையார் பட்டிப் பிரிவில்
பெருமைமிகு குடும்பத்தில்

சாமிநாதரின் பிள்ளையாக
பூமியில் தோன்றிய
புத்திரர்தான் கணேசர்!

கருவைரம் போன்றிருந்த
கணேசனைப் பெற்றெடுத்த
திருவயிறு வாய்த்திருந்த
செல்லத்தாய் நாச்சம்மை

ஆத்தாள் நாச்சம்மை
அப்பச்சி சாமிநாதர்
போர்வாளாம் கணேசரைப்
புவிக்களித்த பெற்றோர்கள்

சீராய்ச் சிறப்போடு
செம்மாந்த பிறப்பதுவும்
காரைக்குடி யென்னும்
கவின்நகரில் நிகழ்ந்ததுவாம்!

## காரைக்குடி

கொப்புடையாள் அருள்விளங்கும் கோலக்குடி
கோவிலூர் ஆண்டவரின் ஞானக்குடி
ஒப்புரவு கண்ணோட்டம் ஓங்குகுடி
உறுத்துகின்ற இனமோதல் நீங்குகுடி
எப்புறமும் கண்மாய் நீர் இலங்குகுடி
இனிக்கின்ற செம்பைநீர் விளங்குகுடி
முப்பாலர், கம்பநாடார், இளங்கோஎன்று
மொழிபுலவர் பலர்தேடும் காரைக்குடி!

சேதுபதி நாட்டினிலே சிறந்தகுடி!
சிவகங்கைச் சீமையிலே உயர்ந்தகுடி!
ஆதிமுதல் இன்று வரை கவிதையோடு
அற்புதமாய் பலகலைகள் நிறைந்தகுடி!
நீதிநெறி வழுவாத நியாயக்குடி
நெசவுமுறை பாங்கான சாயக்குடி
பேதமிலா வேளாண்மை ஈரக்குடி
பேதமின்றி இணக்கமுள்ள காரைக்குடி!

நகரத்தார் சிகரத்தில் ஏற்றகுடி
நாட்டாரும் ஊராரும் போற்றுகுடி
முகவரிகள் உலகெங்கும் இலங்குவண்ணம்
முற்போக்கு நடைமுறையில் மூத்தகுடி!
யுகமாற்றம் செய்தபெரும் கைவினைஞர்
உருவாக்கும் கலையழகால் திளைத்தகுடி!
புகலென்று வந்தவரை வரவுசெய்து
பொருள் கொடுத்து இடங் கொடுத்த காரைக்குடி!

## பிறப்பு

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டு (1908)
சூன்திங்கள் ஆறாம் தேதி
கோயிலில் தமிழைத் கடவுளாய்க்
கொலுவேற்றியவர்
கோக்கவிஞன் கம்பனைத்
தாயாய் இருந்து மடியில் தாங்கியவர்
சான்றாண்மைக்கு ஆழி
சா. கணேசனார் பிறந்தநாள்!

உண்மையில் அது
சடையப்ப வள்ளலின் மறு பிறப்பு!
கம்பனின் மறு உற்பத்தி!

கருத்துக்களையும் கொள்கைகளையும்
சுவீகரித்துக் கொண்டு
எடுத்தும் தொடுத்தும் மட்டுமல்ல
ஏற்றும் கடைப்பிடித்தும்
வாழப் போகும் ஒரு
வாழ்வின் துவக்கம்!

எண்ணற்ற முதல்களை
ஏற்படுத்தப் போகும் - ஒரு
முதல்மகனின் முதல்நாள் அன்று!

செட்டிநாட்டில் முதல்
மக்கள் தலைவன்
தொட்டிலில் போட்ட
துவக்க நாள் - அன்று!

## வளர்ப்பு

இன்றைக்கோ வெறும்விலாச மாகத் தோன்றும்
இயற்பெயரார் சாமிநாதன் கணேசன் தந்தை
அன்றைக்குக் காரைநகர் தோன்றி வாழ்ந்தார்
ஆழ்ந்தபல கலைவல்லார்! ஆகமங்கள்
நின்றுநிலை சிற்பங்கள், வாகனங்கள்
நிகரில்லா வெள்ளிரதம், வேதம், பண்கள்
என்றுபல கலைஞான வெளிநடந்து
எழுதிவைத்த முறிபோல நெறியைக் கொண்டார்.

மலேயாவில் பர்மாவில் கொண்டு விற்று
மல்கிவந்த பொருள்செல்வ அறங்கள் செய்து
கலையழகு ராஜகோபுரத்தைத் தெய்வக்
கற்பகவி நாயகர்க்குக் கட்டச் செய்து
நிலைத்தபெரும் புகழ்கொண்ட நேயத் தாலே
நேர்மைமிகு தன்னைப்போல் பிறந்த செல்வன்
கலைஞராக அறிஞராகக் கவிஞராகக்
கணேசன்எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்!

அங்கையில் மடியினிலே கொஞ்சிக் கொஞ்சி
ஆத்தாளும் வளர்த்திடவே கல்வி கற்க
ரெங்கவாத்தி யார்பள்ளித் தொடக்கக் கல்வி
அரிந்துவைத்த நெல்லினிலே "அரிஓம்" என்று
தன்கையைப் பிடித்தெழுதி ஆசான் சொன்ன
தமிழ்கற்றார் கணேசஅண்ணன் பிறர்க்கும் ஓத;
அங்கவரின் நண்பர் இராமநாதர் பின்
ஆன்மீகக் கோவிலூரின் பீடம் ஆனார்!

அரிச்சுவடி கணிதவகை கீவா லக்கம்
ஆத்திசூடி ஏழிளந்தமிழ் நிகண்டு நன்னூல்
புரிந்துகற்ற கணக்கேடு செய்து கற்று
புகழ்த்தந்தை ஆகமங்கள் செந்நூல் சொல்ல
செறிவான இலக்கியத்தை அந்நாள் ஆன்றோர்
சிதம்பரப்பேர் செம்மலிடம் பயின்றிருந்து
விரிவுலகில் மாற்றத்தை விடுத லைக்காய்
விழைந்து வரும் தலைமையினைத் தெரிய லானார்!

சொன்னபடி வாழ்ந்திடுதல், சீர்திருத்தச்
சுயம்மீட்டுத் தன்மானம், போர்க்குணங்கள்
கன்னல்நிகர் கம்பனிலே ஈடுபாடு
கருத்தோடு "குமரன்" எனும் இதழ் நடத்தல்
தன்னை ஒரு சிற்பியாக்கிச் சிற்பமான
தமிழவேங்கை குருகுலம் சொ.முருகப் பாவின்
நன்னெறியில் தனைச் செலுத்தி கணேச அண்ணல்
நாடுபற்றிச் சிந்திக்கத் தொடங்கலானார்!

சிவநெறியே "கொல்லாமை" என நிலைத்துச்
சிவனடியார் திருக்கூட்டங்கண்ட செம்மை;
யுவ வயதில் துணைஇழந்து கைம்பெண் ஆன
யுவதியினை மறுமணத்தில் ஏற்ற தன்மை;
தவறான தீண்டாமை எதிர்த்து, வீட்டைத்
தான்விற்றுக் குருகுலத்தைக் கண்ட வன்மை;
தவம்போல வாழ்ந்த சொ.முருகப்பா தான்
சரியான வழிகாட்டி கணேசர்க்கானார்!

வளரிளமைப் பருவத்தில் வாய்க்கும் நட்பும்
வடிக்கின்ற கொள்கைகளும் மனிதர் வாழ்வில்
தளர்ந்துமூப் பெய்திவிடும் காலம் மட்டும்
தாங்கிநிற்கும் உருவாக்கும் வளர்க்கும்; மாய்க்கும்

கிளர்ந்துவரும் வயதினிலே முருகப் பாவின்
கேண்மையினால் பயன்பெற்றார் தந்தை தாயின்
அளந்தறியாப் பேரன்பில் அறிவுப் பாலில்
அண்ணலவர் உருவானார்; ஆலும் ஆனார்!

தென்ஆப்ரிக் காநாட்டில் புரட்சி செய்து
தேசத்து நலனுக்காய் காந்தி அண்ணல்
தன்வாழ்வைக் காங்கிரசில் பிணைத்துக் கொண்டு
தலைமையினை ஏற்றிட்ட காலங் கள்தான்
வன்முறையை ஒதுக்கிவிட்டு சத்தியம் போல்
வாழ்வுரிமைப் போராட்டம் காண வேண்டி
முன்னரில்லா முனைப்போடு நாட்டு மக்கள்
முழுவதுமே காந்தியினை ஏற்ற காலம்!

காந்திதான் என்தெய்வம், அவர் கொள்கை கள்தான்
காரிருளின் திருவிளக்கு; காங்கிரஸ்தான்
பூண்டிருக்கும் விலங்குகளை அகற்றி நாட்டைப்
புதுத் திசைக்கே அழைத்திருக்கும் என்றெழுந்த
காந்தநிகர்ப் பேச்சாளர்; தமிழின் ஆழி,
கவிதையிலும் இணையில்லார், இராய. சொ.வின்
பாந்தமிகு வழியினிலும் ஈர்க்கப் பட்டார்
பதினான்கு வயதான கணேச அண்ணல்!

ஊழியன்தான் ராய.சொ.வின் எழுத்துப் போர்வாள்;
உயிரென்றே சுதந்திரத்தை முழங்கும் சங்கு
பாழ்நிலையில் வாழ்ந்திருக்கும் அரிச னத்தின்
பாதுகாவல் கேடயந்தான் அவரின் பேச்சு;
வாழ்வுரிமை வேண்டவில்லை இந்த நாட்டை
ஆளுரிமை கேட்டெதிரி மார்பில் ஈட்டி,
ஆள்வதற்குக் காரைநகர் முதல்தலைவன்
ஆக்கங்கள், சாதனைகள் அவரின் வீச்சு!

மூவைந்து வயதினிலே சா.க.கண்ட
முத்தான வழிகாட்டி; காரைச் செல்வர்
நாவரசர் இராய.சொவும் முருகப் பாவும்
நாட்டிற்கும் மக்கட்கும் செய்த தொண்டு
பாவலர்கள், எழுத்தாளர், அறிஞர் கூட்டம்
பாமரர்கள், தொழிலாளர் இயக்கம் என்று
சேவைகளைச் செய்திடவே மூவர் என்ற
சிறப்பான வரலாற்றின் துவக்கம் அந்நாள்!

மூவருமே விடுதலைக்காய் தியாகம் செய்தார்!
　　மூவருமே காந்தியத்தின் நெறியில் நின்றார்!
மூவருமே சீர்திருத்தம் செய்து வந்தார்!
　　மூவருமே தமிழ்ப் புலமைச் சிறப்பைக் கொண்டார்!
மூவருமே முரணற்ற வாழ்வு வாழ்ந்தார்
　　மூவருமே தமிழ்நாட்டின் மதிப்பைப் பெற்றார்
யாவருண்டு அவரைப்போல் செட்டி நாட்டில்?
　　நூறாண்டும் ஆயிற்று தோன்றக் காணோம்!

ஈரேழு வயதினிலே காங்கிரஸ் கட்சி,
　　ஈடற்ற கதருடையைத் தானுடுத்தல்,
ஊருலகு தெரிந்திருக்க ஆங்கிலத்தை
　　உயர்வான ஞானம்தேர் சமஸ்க்ருதத்தை
பாரதத்தில் தொடர்புகொள்ள இந்தி தன்னை
　　பள்ளியிலே கற்காமல் ஆர்வத் தாலே
சீரோடு கற்றதெல்லாம் அந்தக் காலம்
　　சிங்கமகன் பெற்றதெல்லாம் அறிவுக் கோலம்

## பர்மாவில்

திசையெங்கும் சோர்வின்றி ஓடிஓடி ஈட்டல்
　　செட்டிநாட்டார் தொன்றுதொட்டுப் பெற்றுவளர் ஆற்றல்
அசல்கொடுத்து நியாய வட்டி வாங்கியவர் வாழ்தல்
　　அறத்தோடு கொண்டுவிற்றல் சொத்துகளைச் சேர்த்தல்
இசையோடு அந்நாட்டில் இணக்கமுடன் இருத்தல்
　　எவரேனும் பிழைசெய்தால் அவரைவிட்டு ஒதுங்கல்
நிசமாகப் பெரும் பாடு; பாய்மரத்தில் பயணம்
　　நெடுந்தூரம் மனைவிமக்கள் இல்லாத துயரம்;

பர்மாவில் மலேயாவில் கணேசனின் தந்தை
　　பாங்காகப் பலதொழில்கள் செய்துவந்த துண்டு
செறிவான பர்மாவில் "தோங்குவா" நகரில்
　　சிறப்பாக நிறுவனங்கள் நடத்தி வந்த துண்டு
விரிவாக நடந்திட்ட தொழில் முறையைக் கற்க
　　மேலும் அதை விரிவுசெய்யக் கணேசனார் சென்றார்
பெரும்பாலும் ரங்கூனில் தங்குதலே வழக்கம்
　　பேரறிஞர் சாமிநாத சர்மாவின் பழக்கம்;

உலகத்து ஞானமெலாம் உயர்தமிழில் தந்த
ஒருவரென முதல்வரெனப் புகழ்பெற்ற சர்மா
பலகற்றார், பிளேட்டோ சாக்ரடீஸ் மார்க்ஸ்
பல்லறிஞர் வரலாற்றைத் தமிழர்க்குத் தந்தார்!
இளம்பிறையாய் உருவான கணேசனார் வாழ்வில்
இளம்வயது நண்பர்களில் சர்மாவும் ஒருவர்
தளம்பலவும் அந்நாளில் பர்மாவில் அமைத்துத்
தலைமைநெறிக் கணேசனின் சிறப்பினையும் வியந்தார்.

சிறுவயலார் மு.சோ.ம. கம்பையெனும் ஊரில்
செட்டியார் உயர்நிலைப் பள்ளிஒன்று நடத்த
உறுதுணையாய்க் கணேசண்ணன் உதவிகளும் செய்தார்
உயர்தேச பக்திசொலும் பாடங்கள் தந்தார்
அறநெறியும் குறள் நெறியும் அருந்தமிழில் சொன்னார்!
அருமையாகச் சிலசமயம் வகுப்புகளும் எடுத்தார்!
வருமானத் தொழிலுக்குப் பர்மாவிற்குப் போனார்
வருமானம் பெருக்காமல் தொண்டுகளில் ஆழ்ந்தார்!

அந்நாளில் பெண்கல்வித் தேவைகளை வேண்டி
அ.மெ.மெ. மெய்யப்பர் ஆர்வத்தைக் கண்டு
செந் நகராம் கொப்பனா பட்டியிலே காணும்
சீர்மைமிகு கலைமகளாம் கல்லூரித் திட்டம்
நன்னெஞ்சர் கணேசண்ணன் காந்தி மேனா
நண்பரெலாம் சர்மாவும் பர்மாவில் தீட்ட
குன்றன்ன பேரறத்தை அ.மெ.மெ. குடும்பம்
கொப்பனாபட்டியிலே தொடங்கிடவும் செய்தார்!

பர்மாவில் தொழில்செய்து பெரும்பொருளை ஈட்டி
பலஅடுக்கு மாளிகைகள் கட்டியவர்கள் பல்லோர்!
பர்மாவில் சொத்துக்கள் இழந்துநடை ஆக
பாரதத்திற்கே ஆண்டியென வந்தவர்கள் பல்லோர்;
பர்மாவில் தொழிலிருந்தும் கவனங்கள் எல்லாம்
பலநோக்குத் தொண்டடெனவே அங்குசென்று வாழ்ந்த
அரிமாத்தான் கணேசண்ணன் அதனால்தான் இன்று
ஆண்டு நூறாண்டபின்னும் அவர்புகழுச்சிக் குன்று!

## 1927-34

ஆயிரம் ஆண்டுகள் அடிமைத் தளையில்
ஓய்ந்து கிடந்தோர் கொழுவின் முனையில்,
சிறுசிறு துண்டுகளாய்ச் சிதறிக்கிடந்தோர்
வருபவர்க் கெல்லாம் வாயில் திறந்து
உட்பகை களால்உருக் குலைந்திருந்தோர்
கட்குடி, காமம் எனக் காவல ரெல்லாம்
ஆங்கில ஆட்சிக்கு அடிமையாய்க் கிடந்து
ஓங்கிய கலாச்சாரம் உதிர்ந்த நிலையில்
எதிர்த்தவரை எல்லாம் எதிர்த்துத் தூக்கி
உதிர்த்து எழுந்தது பிரிட்டிஷ் ஆட்சி,

ஆங்கிலம் படித்த அந்நாள் பெரியோர்
காங்கிரஸ் இயக்கத்தைக் கண்டு துவங்க
கோரிக்கையோடும் எச்சரிக்கையோடும்
உரிமை களுக்காக ஒன்று திரண்டனர்
கொள்கை சிறந்த கோமான் கோகலே
லாலா லஜபதிராய் லட்சியத் திலகர்
தென்னாட்டில் வ.உ.சி. சிவா, பாரதி
ஈ.வே.ரா. பெரியார்; இராஜாஜி சேலம்
விஜய ராகவச் சாரியார் என விரிந்த அணியின்
தலைமையைத் தொடர்ந்த தவமாய்க் கிடைத்தார்
போர்பந்தர் அன்னை புத்லிபாய் பெற்ற
மகனாய்ப் பிறந்து மகாத்மா ஆன
மோகன்தாஸ் காந்தி அவர்மேல் மக்கள்
மோகம்தான் கொண்டனர் மொய்த்தனர் தேனீயாய்;

அணையாச் சுடராய் அன்பை ஏந்தி
ஆன்மீகப் பார்வையில் மானிடம் ஒன்றி
தவங்களைச் விதைத்து நலங்களைத் தரிசித்து
யுகங்களைப் பிறப்பிக்கும் யோகியாய் மாறி
இந்திய தேசத்தின் இருதய வேர்களில்
முளைத்தெழுந்த சத்திய மூர்த்தி காந்தி!
ஆப்ரிக்க நாட்டில் ஆட்டிப் படைத்த
நிறவெறி எதிர்த்த நெருப்புச் சுடரவர்!
இந்திய விடுதலைக்காய் இறங்கிய போரில்
எண்திசை எங்கணும் எக்காள முழக்கம்!

பட்டிதொட்டிகள் பாமரர் படித்தவர்
வெட்டத் துடித்தனர் வெள்ளையர் விலங்குகளை,
காரைக்குடியிலும் காங்கிரஸ் இயக்கம்
வீறு கொண்டு எழுந்தது வேந்தர் மூவரால்;
காந்தி அடிகளைக் காப்பியத் தலைவராய்
மாந்தருள் தெய்வமாய் ''மாஞ்சு மாஞ்சு''
இராய. சொ. பாடினார் எழுச்சிக் கவிதையில்
சொ. முருகப்பாவும் சுயமரியாதையோடு
மகான் காந்தியை மனதிற் கொண்டார்!
வாலிபம் ததும்பிய பத்தொன்பது வயதில்
தேசபக்திச் சுடராய்த் திகழ்ந்தார் கணேசன்

ஆப்ரிக்க வெள்ளையரின் ஆதிக்கம் எதிர்த்து
சாப்பட்ட வள்ளியம்மை தமிழச்சி பிறந்த
தில்லையாடி மண்ணைத் தரிசிக்க வந்தார்
பொல்லாங் கெல்லாம் பொசுக்கிய காந்தி!

அந்தப் பொழுதில் அவர் பெரும் அன்பர்
ஒன்றிக் கிடந்த ஊராம் காரைக்குடியில்
விடுதலைப் போரை விறுவிறுப்பாக்க
நிதிதிரட்ட வந்தார் நேரில் காந்தி;

காந்தி தாசராம் கணேச அண்ணல்
மாந்தருள் தெய்வமாம் மகாத்மா தன்னை
காரைக்குடியில் கவினார் தம் வீட்டில்
ஊரைக் கூட்டி உபசரித்து வரவேற்றார்!
காந்தி அடிகளின் காலடி பட்டது
சான்றோர் மகிழ்ந்த சா. கணேசன் வீடு!

அந்த வீட்டில்தான் ஆன்றோர் கூடி
மீனாட்சி ஆச்சியாம் மேன்மை நங்கையை
தானடைந்து இல்லறம் ததும்பி வாழ்ந்தார்!
பெண்மகவை ''மங்கை'' எனப் பெயரிட்டு மகிழ்ந்தார்
ஒழுக்கம் நிறைந்து உறுதி மிகுந்து
வழுக்கள் இல்லாது வரப்பினில் நின்று
கட்டுப் பாட்டோடு கண்ணியம் காத்து
கட்டளை போன்றது கடிமண வாழ்க்கை!

ஆதர்சத் தலைவனைத் தரிசனம் செய்து
ஆங்கிலேயரை விமர்சனம் செய்து
சிராவயல் தன்னில் ஜீவாத் தோழனை

ஆசிரமம் காண அவாவிய அண்ணலை
கூட்டிச் சென்று காட்டினார் கணேசன்!

ஜீவாவை நாட்டின் சொத்தாய்க் காந்தி
நாவாராப் புகழ்ந்தது அந்த நாளில்தான்
ஒத்துழையாமை என்னும் உறுதி எதிர்ப்பை
சத்தியமாக் கிரகம் என்றும் தனிப் பெரும் நெறியை
உத்தமர் காந்தி உணர்த்தி வாழ
இத்தருணத்தில்தான் இயம்பத் தொடங்கினார்!

விவேகானந்தர் சங்கம் என்றொரு அமைப்பு
வீறுகொண்டதும் பாரதி போற்றிய
இந்து மத அபிமான சங்கம் இந்தியாவின்
சுதந்திர வேள்விக்காய் சூளெடுத்தும்
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளில்
பாயிரம் ஆனது பாரத விடுதலைக்கு!

ஆங்கில ஆட்சிக்கு ஆலோலம் பாடிச்
செல்வந்தர் சிலர் பட்டங்கள் பெற்றாலும்
பணமும் பதவியும் படோடபங்களும்
கணமும் மயக்கவில்லை கணேச இளைஞரை!

அந்நாள் முதலாளிகள் ஆன தவக்கைகள்
சிறியவர் இளைஞர் செயல்படு விளையாட்டில்
ஆந்திரத்தில் இருந்து அழைத்து வந்து
வீரர் சிலரை விளையாட விட்டனர்
காரில் ஏற்றிப் பவனிகள் வந்தனர்.

உள்ளூர்ச் சிறுவரை உற்சாகப் படுத்தி
வெல்லச் செய்தார் வேங்கை கணேசன்!
பல்லாக் கேறிப் பவனி வந்தவர்
மல்லாந்து வீழ்ந்து மண்ணைக் கவ்வினார்

இளைஞர் படை அன்று முதல் எறும்பாய் மொய்த்தனர்
களைப்பே அறியாக் கணேச இளைஞரை!

அந்நாள் தலைவர்கள்
சிறுவரோடு சிறுவராய் சேர்ந்தே ஆடுவர்
குருவாய் இருந்து கொள்கையும் சொல்வர்
அத்தகு
அன்னியம் இல்லாத அன்னியோன்யத்

தோழமைத் தலைவரைக் காணப் போமோ?
தோன்றுமோ மீண்டும் அந்த நட்புத் தோரணம்?

## 1935

பிரிட்டன்
முடியாட்சியையும்
குடியாட்சியையும் ஒரே
முளையில் கட்டிய நாடு!

அங்கே
மார்க்சும் உண்டு!
மகாராணியும் உண்டு!
ஆக்ஸ்போர்டும் உண்டு!
அடிமைப் படுத்துகிற
அறிவும் உண்டு!

இந்தியாவின் ஈரலைப்பிடித்த
காசநோய் பிரிட்டிஷ் ஆட்சி
அந்தக்
காசத்தை விரட்ட
ஊசியை எடுத்தவர்
காந்தி அடிகள்

ஒற்றைச் சூரியனாய் காந்தி
உதித்தபின்புதான்
மக்களின் மனப்பிரதேசங்களில்
வெளிச்சம் விளக்குப் போட்டது.

ருசிக்கவே இருந்த நாக்குகள்
உதடுகளோடு சேர்ந்து சுதந்திரத்தை
உச்சரிக்கத் துவங்கின!

கதருக்குக் கம்பீரம் வந்தது
வர்ணபேதங்கள் -
மூவர்ணக் கொடியில் - கொஞ்சம்
முகம் மறைத்துக் கொண்டன

அக்ரஹாரமும் சேரியும்
அணுகத் தொடங்கின!

ஆண்பெண்ணை மதிக்க
ஆரம்பித்தான்!

காந்தியின் பிரவேசம்
ஆயிரம் ஆண்டு அடிமைத்தனத்தை
ஆயிரம் ஆண்டுத் தவத்தால்
அளித்த தரிசனம்

ஆன்மீகத்தில் அழுந்திக் கிடந்த
செட்டிநாட்டுக் காரர்களையும்
சுதந்திர தேவியின் சுடருக்காகக்
கற்பூரம் ஏற்ற வைத்தது
அந்தக்காலம்!

## 1935ல் ஒரு தேர்தல்

சனங்களில் சிலருக்குச்
சனநாயகத்தின் சாளரத்தைச்
சிறிது திறந்து வைத்தது
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்!

விடுதலை என்ற பெரு
வெளியை நோக்கி நடந்த காங்கிரஸ்
சிறுசிறு உரிமைகளைச்
சேகரிப்பதற்காகப்
போட்டியிட்டது தேர்தல்
போர்க்களத்தில்!

இராஜாஜியின் தலைமையில்
முத்துரங்க முதலியாரின் முன்னிலையில்
காங்கிரஸ் இயக்கம்
களத்தில் இறங்கியது.

காரைக்குடியில்
காங்கிரஸ் கூட்டம்
தியாகி கருப்பஞ்செட்டியார்
தெருவெல்லாம் மைக்பிரசாரம்!
தேவர் பேசுவார் என்று!
ஐந்து ரூபாய் செலவு
ஆறு.சொ. உபயம்

சிறப்புச் சொற்பொழிவு
தேவர் பெருமான்!

தேர்தல் நேரத்தில்
தேவருக்கு வாய்ப்பூட்டுச் சட்டம்
"ஆண்டவன் மனிதனாகப் படைத்தான்
அர்சாங்கம் மாடாய் மாற்றியது
மங்களகரமான
மஞ்சள் பெட்டிக்கே வாக்கு"
தேவர் பேசியதெல்லாம் மூன்று சொற்றொடர்
வாங்கியதோ வாக்குக் கடல்!

ஜீவாவும், தேவரும்,
சா.கவும்
திசையெங்கும் சென்று
காங்கிரசுக்குக்
கட்டியங் கூறினார்.

பிராமண எதிர்ப்பை பிரச்சாரம் செய்த
பெரியார்
ஆங்கிலேயர் ஆதரவாக
நீதிக்கட்சியில் சேர்ந்து
நிழலைக் கொடுத்தார்!

நிறங்களை அரசியல் படுத்திய
நேரம் அது!
கட்சிகள் சின்னங்களைக்
கை காட்டாமல்
நிறங்களைக் அடையாளம் ஆக்கி
நின்றன தேர்தலில்!

யோசித்தால்
நிறங்கள் மனித சமூக
வரலாற்றை
மாற்றிய எழுதிய கரங்கள்தான்!

அவை
எப்போதுமே
வேறுபாட்டை வேகப்படுத்தின
ஆரியச்சிவப்பும்
திராவிடக் கருப்பும்

ஆதிக்க வெளுப்பும்
ஆப்பிரிக்கக் கருப்பும்

குணாம் சத்தின் குறியீடுகள்
என்பது மாறாத வரலாறு

அதுபோல இப்போதும் ஒரு
புதிய ஏற்பாடு!

மஞ்சள் பெட்டி காங்கிரசுக்கு
"மஞ்சள் பெட்டிக்கு ஓட்டு
மற்றதுக்கு வேட்டு"
எதுகை மோனையோடு
எழுந்த முழுக்கம்
நீதிச் சீமான்களின்
முதுகை முறிக்கும்
முழக்கமாயிற்று

மஞ்சள் பெட்டியின் மகத்தான வெற்றி
சா.கணேசனின்
சாதனையாகக் கருதப்பட்டது.

ஆனால்
வேதனை அவருக்கு
வீட்டில் இருந்தது

"மதித்தந்தை சாமிநாதர்"
என்று அவரால்
மதிக்கப் பட்ட தந்தை
மறைந்தார்

தந்தையின் மரணம்
கணேசர்க்குக்
குடும்பப் பொறுமையைக் கூட்டி வைத்தது
காந்திய வாழ்வைக்
கனாக் கண்ட கணேசனுக்கு
பர்மாத் தொழிலை பராமரிக்கச் சொல்லி
உறவும் சுற்றமும்
ஓயாது நச்சரித்தன!

பர்மாப் பயணம் திட்டமிடப்பட்டது
ஆனால்

சூழ்நிலையோ சுழற்றி அடித்தது
சுதந்திரப் போராட்டம்
சூடுபிடித்தது!

**1936 - காரைக்குடியில் காங்கிரஸ் மாநாடு**

காரைக்குடியில் காங்கிரஸ் மாநாடு
    காந்தி மெய்யப்பர் தலைமை ஏற்றார்!
ஊரைத் திரட்டிய உபசரிப்பிற்கு
    உபதலை வராய் இராய. சொ. ஆனார்
சீரை உயர்த்தும் செயலராய்ச் சா.க
    சிறப்போடு நடந்தது மாநாடன்று!
சீராய் வாழ்ந்த பர்மாத் தொழிலும்
    சிதையத் தொடங்கியது மேற்பார்வையின்றி!

நாட்டின் பெரிய தலைவர்கள் எல்லாம்
    நாடிக் கூடிய மாநா டதுவாம்!
வீட்டு விசேடமாய் விருந்துகள் செய்து
    விடுதலை வீரரைப் புரந்து போற்றிக்
காட்டினார் சா. க. காரிய தரசியாய்!
    காரைக்குடி நகரவை அனைத்துத் தொகுதியில்
போட்டியே இன்றிக் காங்கிரஸ் வென்ற
    பொழுதுகள்; இராய. சொ. தலைவர் கிரீடம்!

படகை இயக்கும் துடுப்பைப் போல
    படத்தை இயக்கும் இயக்குநர் ஆக
கடமை ஆற்றிய கணேச அண்ணலை
    காங்கிரஸ் இயக்கம் புரிந்து கொண்டது.
திடலில் கூடிய தலைமைக் குழுவில்
    தீர்மானங்களைத் கொணர்ந்தார் சா.க
இடங்கொடுக்க மறுத்தார் இராஜாஜி எனினும்
    ஏற்று ஒப்பியது காங்கிரஸ் இயக்கம்!

ஆங்கில அரசின் திவான் பகதூரும்
    அரசர் அளிக்கும் ராவ் பகதூரும்
ஓங்கும் இராஜா சர் என்ற பட்டமும்
    ஒப்பி வாங்கினோர் காங்கிரஸ் வந்தால்
தீங்கே! அவரை அனுமதித் திருந்தால்
    தேச பக்திக்கு இழுக்கு என்றார் சா.க
ஓங்கித் தட்டி ஒப்பினார்கள்
    உயர்தலைவர்; இராஜாஜி எதிர்த்தும் அதனை!

ஏழை எளியவர்க்கு இலவச உணவு
　　என்ற தீர்மானம் ஏற்கப் பட்டது!
ஏழை ஏதிலார் தம்பால் கணேசர்
　　இரக்கம் அன்று தீர்மானம் ஆனது!
பாழும் ஏழைகள் இன்றும் பசியில்
　　பக்தர் தீர்மானம் தூங்கும் நிசியில்!
நாளும் இராஜாஜி பக்தர் ஆயினும்
　　நம் கணேசர் கொள்கைச் சித்தர் !

அன்னிய நாட்டுத் துணிக்கடை மறியல்
　　அரிய சூதாட்டக் கண்காட்சி மறியல்
இன்னல் தருகிற மதுக்கடை மறியல்
　　ஏகாதி பத்தியத்திற்கு எங்கணும் மறியல்
தென்னர் கணேசர் காந்தியின் சீடர்
　　சேர்ந்து நடத்திய போராட்டமெல்லாம்
வன்முறை இல்லாச் சத்யாக் கிரகம்
　　வசந்தம் வளர்த்த மக்களி யக்கம்!

## (வேறு)

இராமனைப் போன்ற கரியநிறம்
　　இராஜாக்கள் தலை வணங்கும் !
புறாச் சிறகுபோல் கதருடையில்
　　பொலிதும்பை வெள்ளை கடன்கேட்கும் !
உறுமும் சிங்கம் அவர்குரலில்
　　உண்மை ஒளிரும் அகவெளியில்!
தரும நெறியே தன் நெறியாகத்
　　தவமாய் வாழ்ந்தார் சா. கணேசன்!

காங்கிரஸ் விடுதலை என்று பலர்
　　காந்திய நெறியில் நின்றாலும்
தாங்கி பிரிட்டிஷ் ஆட்சியினைச்
　　சார்ந்து சிலரும் இருந்தார்கள்;
ஓங்கிஎழுந்தோர் தமக்கெல்லாம்
　　ஒத்துக்கிடந்தோர் பகையானார்!
தூண்கள் தாங்கும் கோட்டைக்குள்
　　சுண்டெலி போட்டது ஓட்டைகளே!

பெரியார் நண்பர் சிலபேர்கள்
　　பிரிட்டிஷ் அன்பர் சிலபேர்கள்
உரிய காவல் துறையோடு
　　ஒடுங்கி அடக்கத் துடித்திட்டார்!
எரிமலை தன்னை நீருற்றி
　　எதிர்த்து அடக்க நினைத்தோர்கள்
எரிதழல் சூடு பொறுக்காமல்
　　இயக்க மற்றுக் கிடந்தார்கள்!

கட்டிடம் உயர்ந்த கானாடு
　　காத்தான் நகரச் கூட்டமொன்றை
கட்டியம் கூறும் மக்களுடன்
　　கணேசர் தலைமையில் நடக்கையிலே
சுட்டுத் தள்ளுவேன் நிறுத்தென்றே''
　　துப்பாக்கி நீட்டி முந்திட்டார்!
துட்டுக் காக வெள்ளையரின்
　　துணையாய் நின்ற காவலர்கள்!

பிளிறுகின்ற யானைமுன் தடியெடுத்தாற் போல
குளிருநிலா எதிர்த்தங்கு குடைபிடித்தாற் போல
எழுகின்ற கதிர் எதிர்த்துவலை விரித்தார் போல
களிறுநிகர் கணேசர்முன் காவலர்கள் பாய்ந்தார்

அறம்படிக்கும் தலைவர்முன் அடம்பிடிக்கும் போலிகள்
பிரம்படிக்கும் தடியடிக்கும் உடன்துடிக்கும் காலிகள்
மறம்படிக்கும் ஆட்சியர்க்கு மடிபிடிக்கும் கோழைகள்
உரம்படிக்கும் கணேசர்தன் உடம்பழிக்க முந்தினர்!

அட்டைபோல உறிஞ்சுகின்ற ஆங்கிலேயர்க் கஞ்சவோ?
ஒட்டியவர் காலில்விழும் உங்களுக்கு அஞ்சவோ?
சுட்டுவிடு என்மார்பில், துளைக்கட்டும் குண்டு''
சட்டைகிழித்துக் கணேசர்உரை தலைநிமிர்ந்து கொண்டு!

ஊளையிட்ட நரிகளெலாம் ஓடிப் பதுங்கலானார்!
தோள்காட்டி மார்காட்டி கணேசர் விளங்கலானார்!
மேல்சட்டை போடுவதை அன்றுமுதல் தவிர்த்தார்
வாழ்நாளில் இவ்விரதம் வாழும்வரை பிடித்தார்!

சத்தியத்தை சட்டையாக அவர் கொண்ட தாலும்
தத்துவத்தில் காந்தியைப்போல் அவர் இருந்த தாலும்
முத்திரையைப் போன்றதுதான் கோலத்திரு மேனி
சுற்றிவந்த துப்பாக்கி தோற்கவைத்த ஞானி!

## கம்பர் விழாத் துவக்கம்

மொழியறிவும் இலக்கியத்தில் முதிர் உணர்வும்
முறையான பயிற்சி யோடு
வழிவழியாய் வந்திட்ட பக்திநெறி
வழுவாத வாழ்க்கை யாலே
கொழிதமிழிற் பெருங்கவிஞன் கம்பநாடன்
கூறுகிற இராம காதை
விழியாகச் போற்றுகின்ற அறிஞரின்
விருப்பந்தான் கம்பன் திருநாள்!

முதன்முதலில் கோவிந்தராச அய்யங்கார்
முன்நின்று நடத்தி வந்த
இதழான "கம்பநாடார்" தாளிகையும்
எழுச்சியுள்ளமுருகப் பாவின்
புதுமைமிகு "குமரன்" எனும் மாசிகையில்
பி.ஸ்ரீயும் பொறுப்பை ஏற்க
உழுவலன்பர் கணேசரின் ஆர்வமது
கம்பனிலே உதித்த தந்நாள்!

உபன்யாசம் கம்பனிலே நடந்ததுண்டு!
உயர்தமிழில் புலவர் பல்லோர்
தவறாது கம்பனிலே ஆழ்ந்திருந்து
சபைகளிலே பகிர்ந்த துண்டு!
சிவகிரியார் குற்றால டி.கே.சி.
திகழ்ரசனை உரைத்த துண்டு!
எவருமே ஒருபுலவன் தனிவிழாவை
எடுத்தற்குச் சான்றைக் காணேண்!

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து
ஒன்பதாம் ஆன ஆண்டில்
தாய்மண்ணில் சிவன்கோயில் எதிரினிலே
தகுதியான மேடை கண்டு
ஒய்வற்ற டி.கே.சி. தலைமையேற்க
உருவான கம்பர் விழாத்தான்
ஆய்வரங்காய் உலகமெலாம் பின்பற்றும்
ஆரம்ப விழாவாய் ஆகும்!

அறநெறியிற் ஆழ்ந்திருக்கும் இராமனின்
அரும்வாழ்வை உரைத்த கம்பன்
இறைமொழியன், ஈடில்லான், வான்மீகி
இயம்பியதைத் தமிழ்மண்ணிற்காய்
அறவழியில் உரைத்தனை அறிஞர் கூட்டம்
அரங்கினிலே சொன்ன பாங்கால்
பிறந்ததன்று தமிழ்நாட்டின் ரசனையூற்று
பிறப்பித்தார் சா.க. தாயாய்!

கம்பர்விழா நடந்ததுவும் உலகமெங்கும்
கம்பன்மொழி திகழ்ந்த போக்கும்
கம்பர்உரு, கம்பர்கோயில், கம்பநெறி
கனித்தமிழின் விளைந்த பேறும்
அன்பவரவர் கணேசர்தன் அர்ப்பணிப்பும்
அறிஞர்களின் பங்க ளிப்பும்
பின்புவரும் பகுதிகளில் வளரக்காண்போம்
பிறந்தகதை இதுதான் கேட்டீர்!

## தனிநபர் சத்யாக்கிரகம் 1942

காந்தி
தனிமனிதனின் முழுமையையும்
சமூகத்தின் வளமையையும்
சிந்தித்தவர்!

சமூகம்தான் மனிதனை
உருவாக்குகிறது - இது விஞ்ஞானம்
மனிதன்தான் சமூகத்தை
மாற்றுகிறான் - இது மெய்ஞானம்

இரண்டின் உண்மையை ஏற்று
தன்னையும் சமூகத்தையும்
தழைக்கச் செய்வது - காந்தி தன் ஞானம்

காந்தி
ஏகாந்தத்தில் - தம்
அந்தராத்மாவின் குரலில்
சத்தியத்தின் தெறிப்பைப்
தரிசிப்பதுண்டு!

அந்த
ஏகாந்த தரிசனமே
எத்தனையோ தலைவர்களைக்
காந்தமாக்கிச்
கவர்ந்ததுண்டு,

அந்தத் தரிசனத்தின்
அறைகூவலில்
நாடு கிளர்ந்தது - நாற்பத்திரண்டில்
தனிநபர் சத்தியாக்கிரகமாக

**சா.க**

கம்பனடிப் பொடியானது பிற்காலம்
காந்தி அடிப்பொடியாய் இருந்தார் அக்காலம்!

காந்தி - கம்ப இராமன்
அயோத்தி - இராமராஜ்யம்
பிற்றைநாள் மாற்றமும்
பெருமைக்குரியதே!

நட்சத்திரங்களுக்கிடையே
சூரியன் ஒன்றுதான்

தனிநபர் சத்யாக்கிரகத்தின்
தனிநபராக சா. கணேசன்

பிரிட்டிஷ் தர்பாரின் பிரம்மாண்டத்தைச்
சத்தியவேள்வியின் விசுவரூபத்தால்
சிறிதாக்கிக் காட்டிய சித்து
சத்யாக்கிரகம்!

"டெல்லி சலோ"
டெல்லிக்குப் போவோம்'
இந்த
இரட்டைச் சொற்கள்
திரட்டிக் காட்டியது தேசத்தை!
மிரட்டத் தொடங்கியது
வெள்ளையரை!

மேலாடை அணியாத
தலைவனின் ஆணை

மேலாடை அணியாத
தொண்டன்
ஓர் ஆள் சேனை!
தனி மனிதத்தானை!

அறுபத்தியெட்டு நாட்கள்
அய்நூற்று எண்பத்தி
எட்டு மைல்கள்!
சிறகைச் சுருக்கிய
சுதந்திரப் பறவை
நடந்தே ஆடிய நாட்டியம்!

வழிவயல்களில்
விடுதலை வித்துக்கள்!

சென்ற திசையெல்லாம்
ஜெய்ஹிந்த்
வந்தேமாதரம் - முழக்கம்!

சிற்றூர்களும் பேரூர்களும்
கண்டு கொண்டன
கணேச வெளிச்சம்!

சென்னையிலேயே - அவரைக்
கைதுசெய்து - அலிப்பூர்ச்
சிறையில் அடைத்தது
பிரிட்டிஷ் ஆட்சி.

ஆறு மாதம்
கடுங்காவல் தண்டனை

பூட்டிய சிறைக்குள் - விடுதலைப்
புலிகளின் கர்ச்சனை!

இந்தியத் திருநாட்டின்
ஏராளமான தலைவர்கள்
அலிப்பூர்ச் சிறையிலே அடைப்பு!

நேரு உட்படத் பல தலைவர்கள்
நேரிலே அறிமுகம்!

சிறைக்கூடத்தை பள்ளிக்கூடம்
ஆக்கியது

ஆசிரியர் கணேசனின்
அறிவுமுகம்!

இலக்கியங்களும் இலட்சியங்களும்
சிறைத் தோழர்களுக்குச்
செவித்தேன் பாய்ச்சின!
மன வைராக்கியத்தைப் பல
மடங்கு கூட்டின!

காரைக்குடியில் போராட்டம்
காந்தி சதுக்கத்
துப்பாக்கிச் சூட்டில் பலியானார்
தொழிலாளி நெல்லியான்!

## வெள்ளையனே வெளியேறு

"அகிம்சை" "சாத்வீகம்"
"உண்ணா நோன்பு"

இவை
சமணரின் சாதனை!
புத்தரின் போதனை!
மதநெறியின் மாண்பை
அரசியல் நெறியாக்கி
அண்ணல் செய்த சோதனை!

"ஆதிக்கத்திற்கு அடங்காமை"
"வன்முறைக்குப் பணியாமை"
"அடக்குமுறைக்கு வணங்காமை"

துப்பாக்கிகுண்டுகளுக்கு..எதிரில்
துணிவும், முழக்கமும்!

கட்டை விரல் கூட அசையாது
வெற்றி அடையும் வித்தை
அகிம்சை

எதிரிகளை வெல்லும் புதிய
அன்பாயுதம் அகிம்சை

காந்தி அடிகள் காட்டிய வழியில்
உலகம் ஓரடி நடந்திருந்தால்கூட

உருவாகியிருக்குமா
ஓயாத தீவிரவாதமும்
உடன்பிறந்த அடக்குமுறையும்?

வந்திருக்குமா வகுப்புவழி
பகையுணர்ச்சி?

பரிணமித்திருக்குமா
பாபர் மசூதி இடிப்பு?

தொலைந்திருக்குமோ
தொன்மையான நல்லிணக்கம்?

காந்தியைக் கோட்சே கொன்றான்!
காந்தியத்தைக் கொன்றார்கள்
புதுயுக தர்மிகள்!

அகிம்சை நெறியின்
அடுத்த யுத்தம்
"வெள்ளையனே வெளியேறு"

எப்பக்கமும் முழக்கங்கள்
துப்பாக்கித் தோட்டாவாகி
துரத்தின வெள்ளையரை!

ஆங்கிலேயரின் அடக்குமுறையும்
காங்கிரசின் போர்முறையும்
ஒன்றை ஒன்று உராயத்
தீப்பிடித்துக் கொண்டது தேசத்திற்கு!

காட்டுத்தீயாகச் சுதந்திர வேர்கள்

நெற்றிக் கண் திறந்துவிட்டது
தேசத்தின்
நேசமுகத்திற்கு!

சரித்திர ஞாபகங்களைச் சேமிக்கையில்
ஒருதரம்வட
அதற்குமுன் இந்தியா
ஒன்றானதில்லை

இனவெறியை எதிர்த்து
இதயமுள்ளோர் திரள்கையில்

பதவியையே அண்டினர் - சில
பாதந் தாங்கிகள்

பிளவுபடுத்துவதே
பிரித்தானியர்களின் வழக்கம்
முதன்முதலாய்
பிளவு படாப் பாரதத்தின்
பிளிறலாய் எழுந்த முழக்கம்
"வெள்ளையனே வெளியேறு" வெடி முழக்கம்!
இந்திய வானத்தின் இடி முழக்கம்!

பொய்வழக்குகள், அச்சுறுத்தல்
சோடனைகள்
ஆளும் வர்க்கத்தின்
அத்தனை அட்டகாசங்களும்
விடுதலைப் போராட்டத்தின்
வேகத்தைக் கூட்டின;
ஆயுதம் இல்லாத
அகிம்சை வழியில்
ஓயுதல் செய்யாத
உத்வேகத்தை ஊட்டின!

ஆழி யலையை அடக்கவும்
ஆகாய வெளியை வளைக்கவும்
ஊழிக் காற்றை ஒடுக்கவும்
உறுமிச் செறுமிப்
பொறுமிப் பாய்ந்தனர்
பொல்லாத அதிகாரிகள்!

தலைவர்கள் சிறைப் படுத்தப் பட்டனர்
தலைமறைவானார் சா. கணேசன்!

கண்டால் "சுடும்படி"
கட்டளை இட்டது
காவல் துறை!

சத்தியம் அவருள்
சங்கமத் திருந்தால்
எத்துன்பத்தையும் தாங்கும்
இயல்பு அவரின்
இரத்த மானது!

அதிகாரிகளின் கண்களில்
மண்ணைத்தூவி
தொண்டர்களின் நெஞ்சில்
துணிவைப் பாவி
மாறுவேடத்தில்
மறைந்திருந்து
போரிட்டதோர் ஓர்
புதிய அத்தியாயம்!

தூக்கமின்மை, பசி
வேவு பார்க்கும் வெள்ளையரின்
ஒற்றர்கள்
காவு கேட்கும் காவல் துறை
கருப்பர்கள்!

சுடப்படலாம் என்ற
சூழ்நிலையில் கூட
கடப்பாடு மறவாத
கணேச அண்ணன்
கொள்கை இரும்பால் கட்டிய
மனிதக் கொத்தளம்!
சஞ்சலமும் சபலமும்
சற்றும் அணுகா
தியாகச் சரித்திரம்!

ஒன்றரை ஆண்டுகள்
ஒளிந்து திரிந்தார்

புதுவயலை ஒட்டிய
சிறு கிராமத்தில் - வைக்கோல்
போரில் மறைந்திருந்தார்

கூட இருந்தவர்
தேவகோட்டை திரு. அருணாசலம்

வெவ்வேறு வடிவத்தில் வெவ்வேறு இடங்களில்

நெருப்புக் கங்குகளில்
நிழலில்
சுழன்றடிக்கும் சூறாவளியில்
வாழ்வின் ஒவ்வொரு பொழுதிலும்
அவரை

வாட்டநினைத்தவர்கள்
வாட்டமுற்றார்கள்!

களைத்துப் போன காவல்துறை
சுற்றி வளைத்துச்
சோதனை போட்டது - அவரது
வீட்டை
அதிகாரிகளும் தமிழர்கள்தான்
ஆனால்
அவர்கள் உடலில் ஓடியது
வெள்ளையரின் விசுவாசக் குருதி!

அட்டூழியங்களின் பட்டியல்கள்
ஆணவத்தின் உத்தரவுகள்

சா.க.வின் தாயாரும்
மனைவியும் மக்களும்
தனித்திருந்த வீட்டில்
மலபார் போலீசார் வழியை
மறித்து நின்றனர்.

சிலுவை சுமந்த மகன்
சிறுசைச் சுமந்த மருமகள்
வறுமை அறியாத வாழ்க்கை
வாரிக் கொடுத்த செங்கை
நாட்டிற்குத்
தன்மகனை ஈன்ற தாய்
வீட்டிற்குள் அடைக்கப்பட்ட
வேதனை

புன்னகை தொலைத்த
போராளியின் மனைவி
சின்னஞ்சிறிய செல்ல மகள்
தன்னை அடக்கித்
தவமிருந்த தோற்றம்.

தியாகியைத் தெரிகிறது
தியாகத்தைத் தெரிகிறது
பின்புலம் என்றேனும்
பேசப்படுகிறதா?

வீடு முற்றுகை
தொடர்ந்து
ஏல நடவடிக்கை!

சா.க. வீட்டில் அன்று
நடந்தது-ஒரு
சட்டபூர்வக் கொள்ளை.

கொலைகாரர்களையும்
கொள்ளைக்காரர்களையும்
பார்க்க வேண்டிய விதத்தில்-
ஒரு
தேசபக்தனைப் பார்த்தது அரசு!

தேடப்படும் குற்றவாளியாக
அபாயகரமானவராக
ஆங்கில அரசின் எதிரியாக
அறிவிக்கப்பட்டார்.

அந்தத்
தேசபக்தரின் முகவரி தேசம்
காவல்துறைக்கோ
கட்டுக்கடங்கா ராஜவிசுவாசம்

தனது
கடமையைச் செய்ததில்
காட்டியதோ ராட்சசம்!

வீட்டுச் சாமான்கள்,
வெள்ளிப் பாத்திரங்கள்,
பர்மாவிலும் மலேசியாவிலும்
பார்த்துப் பார்த்து
சேகரித்த திரவியங்கள்,
நகைகள், நாணயங்கள்,
வகை வகையாக
வாரிக் கொண்டு போயினர்.

குப்பைத் தொட்டியில்
கிடந்ததாம்-ஒரு
வெள்ளிவட்டி

எதிர்த்துப் பேச முடியாமல்
திகைத்துப் போயினர் பெண்டிர்.

தடிகளாலேயே பேசுகிற
தார்மீகத்தார்,
மகிமையுள்ள மலபார் மண்ணைக்
கொடூர வடிவாக்கிய குணத்தார்,
மலபார் காவலர்கள்
இல்லாத எதிரியை உருவாக்கி
எல்லோரையும் தாக்குபவர்கள்.

வரண்டு கிடந்த அவர்கள்
திரண்டிருந்த சா.க.வின்
செல்வங்களைத்
திரவியம் திரவியமாக
அள்ளிக் கொண்டு போனார்கள்
அவரவர் கணக்குக்கு.

நாட்டை நேசித்ததற்காக - அவரின்
வீட்டைச் சூறையாடின
வெறிநாய்கள்- அவரோ
காட்டில் ஒளிந்திருந்து சுதந்திரக்
கனாக் கண்டு கொண்டிருந்தார்.

திமிங்கலத்தைப் பிடிக்கத்
தூண்டிலைப் போட்டுக்
காத்திருந்தது காவற்படை!

நண்பர்கள் வேட்டையாடப்பட்டனர்
தெரிந்தவர் எல்லாம் தேடப்பட்டனர்
மெ.நா. சிதம்பரம்
சா.க.வின் அருமந்த தோழர்
குறிவைத்துத் தாக்கப்பட்டார்
குணக் கேடர்களால்

கழுகுகளின் ராஜ்யத்தில்
கோழிக்குஞ்சுகளுக்கு
ஏது பாதுகாப்பு?

நரிகளின் பிடியில்
கன்றுக்குட்டிகளின் கதறல்.

உயிர்ப் பிரேதங்களாய்
உலவினர்

காக்கிச் சட்டையோடு
காவல்துறையினர்!

தேசபக்தியே ஜீவனாக
ஆயுதமில்லா அகிம்சையிலே
அர்ப்பணிப்புகள்!

இந்திய சுதந்திரப் போரில்
எதிரியின் இரத்தம் விழுந்ததில்லை-
ஆனால் சிந்திய
இந்திய ரத்தம் குறைந்ததில்லை!

ஒரு
யோகியைப்போல உள்ளம் அடக்கி,
போகம், மோகம், ஒதுக்கி-
சுதந்திரத்
தாகத்தோடு தனித்திருந்தவர்
தேகம் கெட்டுத் தேசு கெட்டு
வாகுகெட்டு வாடியிருந்தவர்

பூண்டகோலமும் புதுப்புது வேடமும்
ஆண்டவர்களுக்கு அகப்படவில்லை.
அடக்குமுறைக்கு வசப்படவில்லை.

அடக்குமுறைக்கு அஞ்சாமல்
அடுத்தவர் காலில் கெஞ்சாமல்
இடுக்கண் கண்டு துவளாமல்
எடுத்த கொள்கை மாறாமல்
இருந்து வந்தார் கணேசனார்
இராஜாஜி சொன்னார் சரண் அடைய.

ஒன்றரை ஆண்டுகள் ஓடிய பின்னர்
உயர் காவல்துறை ஐ.ஜி. முன்னர்
சா. கணேசன் சரணம் அடைந்தார்.
அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார்
பதினெட்டு மாதம் சிறையில்
பலிவாங்கப்பட்டார்.

ஆனால் அவரின் சீடர்கள் அக்கினிப் பாதையில்!
தேவகோட்டையில் எரிந்தது!
சிறைச்சாலைகள்!

## சான்றாண்மைக்கு - ஒரு சான்று

விடுதலைப் போரின் விடியற்பொழுதுகள்!
ஒரு
சரித்திரச் சம்பவம் - சா. கணேசரின்
சான்றாமைக்கு சான்றாய் ஆகிறது!

'ஆர்ச் அண்ணாமலை'
சுதந்திரப் போராட்டம்
சுடர்களில் ஒருவர்.

சிறைப் பறவை

அம்பறாத் துணியில்
அடங்கிக் கிடந்த
அம்பு
வில்லுக்கு வேலைவைக்காமல்
தானே பாயும் தெம்பு.

தேவகோட்டை
வளைவுப் பக்கத்தில்
வசித்திருந்தால்
வளைவு அண்ணாமலை

ஆங்கிலத்தில்
ஆர்ச் அண்ணாமலை

வளைவருகில் இருந்தாலும் தீமைக்கு
வளையாதவர்-யாரையும்
வளைக்காதவர்-தியாகத்திற்கு
சளைக்காதவர்

நாட்டுப்பற்றை-பால் குடிக்கையிலே
ஊட்டப் பெற்றவர்-சா.க.வால்
ஊற்றம் பெற்றவர்!

பம்பாயில் கைது செய்யப்பட்டார்!
தமிழ்நாட்டில்
பந்தாடப்பட்டார்!
வீதி வழியே விலங்கிடப்பட்டார்
சிறைக்குள்ளே சித்ரவதைப்பட்டார்.

தட்டில் தண்ணீரை ஊற்றி
நக்கிக் குடிக்கச் சொன்னார்களா
நாசகாரர்கள்
தொல்லைகள் அனுபவித்த
மற்றொருவர்
தொண்டர் முத்தய்யா!

குலசேகரப்பட்டிணம்
சதிவழக்கில்
விடுதலையான
வேறு இரு வீரர்கள்
இராஜகோபால், காசிராஜா.

கடுமையான காராக்கிருகத்திருந்து
விடுதலையாக வெளிவந்தபோது
சா.கணேசன்-ஒரு
சரித்திர வரவேற்புக் கொடுத்தார்.

கணேசனின் இடையறா நண்பர்
தடைகளை முறிக்கும் தவப்பெரும் தலைவர்
பசும்பொன் தேவரின் பாங்கான தலைமையில்
கொற்றவாளீசுரர் கோவிலூரிருந்து
நாதசுர மேளத்தோடு நாட்டுத் தொண்டரை
அம்பாரி யானையில் அழகுற ஏற்றி
ஊர்வலமாக ஊருக்கு அழைத்தார்!

அண்ணாமலையார்க்கும் மற்றவர்க்கும் கார்த்திகைத் திருநாள்
தொண்டர்களுக்கெல்லாம் தொழுகைப் பெருநாள்.

தனது தியாகத்தை தப்படிக்காது
பிறரது தியாகத்தை பெரிது பண்ணியவர்
கணேசன்!

அடியேன்! எளியேன்!
அடிப்பொடியேன் எனத்
தன்னைச் சுருக்கிப் பிறரைப் பெருக்கிய
நன்னெறியாளர் நம்பி கணேசன்!

அந்தப்
பண்பும் வணக்கமும்
எளிமையும் அருமையும்
எவரிடம் காண்போம் இனி?

## 1946 - மகள் மங்கையர்க்கரசி திருமணம்

இல்லறம் ஈந்த இனிய மகட்கு
இல்லறம் நல்கும் வேளை வந்தது
காரைக் குடியில் மாற்றூர்ப் பிரிவில்
ஊரில் உயர்ந்த உயர்ந்த குடும்பத்தில்
பழநியப்பர் பெற்ற பண்பார் செல்வர்
திருமண நாளில் முழுத்த வேளையில
மங்கை யாச்சியின் மணவாளன் ஆனார்
தங்க மனத்தார் சண்முகச் செம்மல்.
இனிய இல்லறம் நிறைந்த செல்வங்கள்
கனிவுடன் எப்போதும் கணேசர்க்கு அணுக்கம்.

பேரன் பேத்திகள் பெயரில் கூட
ஆரத் தழுவிய ஆருயிர்க் கொள்கையைப்
பிரதி செய்தே பெயர்கள் இட்டார்
விரதம் போல் வாழ்வை வாழ்ந்த
சரிதத் தலைவர் சா. கணேசன்
காந்தி, கண்ணன், கம்பராமன்
வாசுகி, திருவாசகம், கண்ணகி
மாந்த இனத்தின் மாபெரும் சான்றோர்
ஏந்திய பெயர்களே இவர்களின் பெயர்கள்
பாசம், பிரியம், நேசம் இருப்பினும்
தேசம், கம்பனே தேறிய நெஞ்சினால்
வரைமுறைக்குள்ளே வாழ்ந்து காட்டினார்
தலைமுறை தாண்டியும் வாழும் தகைமையர்.

## தமிழக காங்கிரஸ் தலைவர் தேர்தல் - 1946

சுதந்திரம் இனிமேல் தொட்டுவிடும் தூரம்
துல்லியமாகத் தெரிந்தது நாளும்
கதரும் ராட்டையும் காங்கிரஸ் ஆன
காலம்போய் பதவிகளின் களமான காலம்!
நிதமும் நாட்டை நினைந்தவர் மத்தியில்
நிசமாய்ப் பலபல குழுக்கள் உதித்தன!
இதமாய் இராஜாஜி தலைமை தாங்கினும்
இவர்க்கும் எதிர்ப்புகள் ஆங்காங் குதித்தன!

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தல்
சத்தியமூர்த்தி காமராஜர் நிறுத்த
இமைத்திடும் நேரம் தேர்தல் நாளில்
இராஜாஜி நிறுத்தினார் சா.க. தன்னை!
தமைமுன் னிறுத்தி வாக்குகள் கேட்பதை
தனித்தனி குழுக்கள் அமைத்து வேட்பதை
சுமையென நினைத்துக் கணேசன் இருந்தார்
சுறுசுறுப் பானது எதிர்ப்பக்க முகாம்!

கணேசனின் மௌனம் காமராஜ் லாபம்
கனிவுடைய தோழர் அருணாசலம் கூட
கணேசன் வேண்டாததால் காமராஜருக்கு வாக்கு
காங்கிரசுள் வந்து கணேசனின் புறக்கணிப்பு
கணேசர் காலமெலாம் இராஜாஜி அன்பர்,
கட்சிக்குள் குழுச் சேர்க்க நினைக்காத நெஞ்சர்
தன்நேசம் தன்தேசம் தான் என்று வாழ்ந்தார்
தவயோகிபோலத் தன்பணிகள் தொடர்ந்தார்!

## 1947 சுதந்திரம் -
## சுதந்திரத்தின் பின்னர்

இருட்டுக் குகைக்குள் இருகைகளும் பிணைத்து,
அரட்டியிருந்த ஆங்கில ஏகாதிபத்தியம்
விரட்டப்பட நாடு விடுதலைஅடைந்தது;
குருட்டுக்கண்களுக்கு ஒளிகுளிரக் கிடைத்தது

மதத்தின் பெயரால் துண்டாக்கப்பட்டு
சுதந்திர மூச்சைச் சுவாசித்தது இந்தியா

தேசத்தின் விடுதலைக்காய்த் தியாகம் புரிந்தோர்
காங்கிரஸ் அரசால் கௌரவிக்கப்பட்ட பட்டனர்;
நிலங்களை ஒதுக்கி ஓய்வூதியம் அளித்து
வளங்களை அவருக்கு வாரித் தந்தது.

“கூலியா தொண்டிற்கு?” எனக்கூறி மறுத்தார்
ஆழி பெயரினும் தான்பெயராத ஆன்றோர் கணேசன்;

இந்தியா வெளிநாடு இரண்டு இடங்களிலும்
இந்தியர்தம் முதலீட்டால் இயற்றிய வருவாய்க்கு
இரு நாடுகளிலும் ஏராளமாக

வருமான வரியை வழங்கும் கட்டாயம்
அன்றைய முதலீட்டாளரை ஆட்டிப் படைக்க
வேண்டுகோள் விடுத்து புலாபாய் தேசாயை,
நீண்டநாள் நண்பரை நேரில் சந்தித்து
நேரு அரசிடம் நியாயம் கூறி
வரிவிலக்கினை வாங்கிக் கொடுத்தார் கணேசன்;

நடுவண் அரசின் நல்லெண்ணக் குழுவிற்கு
தலைமை தாங்கி மலேயா சென்றார்,
வழி வழி வாழ்ந்த வம்ச இந்தியர்
உரிமை யோடு அங்கே உயர்ந்து வாழவும்
மலேயா இந்தியா உறவு மலரவும்
அயர்விலாக் கணேசன் ஆற்றினார் பணியே;

துயரைக் கேட்டபின் தூர ஒதுங்குவது
பயனிலாச் செயலைப் பண்ணுதல் என்பதோ
கணேசன் வாழ்க்கையில் கடுகளவும் இல்லை;

## வள்ளலும் சா.க.வும்

காரைக் குடியில் கல்லூரி ஒன்றை
ஆரம்பிக்க மனசில் அசைபோட்ட போதே
வள்ளல் அழகப்பர் தன்மனதின் ஆவலைச்
செயல்வீரர் சா.க.விடம்தான் செப்பினார் முதலில்,

அழகப்பர் அறநிலை ஆரம்பித்த ஞான்று
அறநில உறுப்பினர் ஆக வேண்டித்
தந்தி அடித்துச் சம்மதம் வேண்டினார்
இந்தியா பெற்ற ஈடிலா வள்ளல்;
அழகப்பர் அறநிலை முதலாம் உறுப்பினராகத்
திகழ்ந்தனர் உயர்ந்த தேசபக்தர் கணேசன்

இருவருக்கிடையே இடைஓடிய நட்பு
ஒருவருக்கொருவர் மதித்த நட்பு;
அழகப்பர் வரைபடத்தை அப்படியே வாங்கி
செயலால் மாற்றிய சேவையர் கணேசன்;

வாரிக் கொட்டிய வள்ளல் மழைக்கரம்
ஏரைப் பிடித்து சா.க உழுகரம்
கல்விப் பயிர் காரைக்குடியில் தழைக்க
செல்வப்பயிர் வித்தைச் செலுத்தினார் வள்ளல்;

ஒத்துழைத்தே அவர் உளப்பாங்கு அறிந்து
வெற்றி அறுவடைக்கு விழைந்தார் கணேசன்;

அழகப்பர் கொடையால் அரும்பி இருந்த
மத்திய மின்வேதியல் நிறுவனம் அதற்கு
அரசாங்கத்தின் பெரிய அதிகாரிகள்
தடைசொலித் திட்டம் தகர்க்க நினைத்தார்கள்
பிறமாநிலத்தின் பெருந்தலைவர் எல்லாம்
தம் மாநிலத்திற்காய் வேண்டி நின்றார்
காரைக்குடியில் நிறுவ கணேச அண்ணல்
நீராதாரத்தை நிரூபித்த தினாலே
நிலையம் இங்கே நிறுவப்பட்டது
அழகர் விருப்பம் அரங்கேறியது.

அழகப்பர் அமைத்த அருட்கொடைகளில்
அண்ணல் கணேசன் அணுகி இருந்தாலும்
வேலைகளுக்கே வேறு எதற்குமோ
சிபாரிசுகளைச் செய்ததே இல்லை

"தகுதி வளர்த்துக் கொள்! தான் உயர்வடைவாய்!"
அண்டிய சிலருக்கு அவர் அறிவுரையாம்
இதனால்
அருகில் இருந்தவர் தூரப் போயினர்!
பழகி வந்தவர் பகையெனக் கொண்டனர்!
கணேசர் வாழ்வினில் நடந்தன இத்தகையன
ஆயினும்
கடந்ததே இல்லை அவர் கண்ணியத் தடத்தை!

சிறை அனுபவித்தில் சேமித் திருந்த
நிறை நட்பாளர் நேருப் பெருமகனார்
அழகப்பர் கல்லூரி அடிக்கல் நாட்டுகையில்
கணேசரைப் பார்த்துக் "கம்பர்" என்றழைத்தது
அழகப்பர், அறிஞர்களால் அடிக்கடி கூறப்பட்ட
அனுபவ நினைவுகள் கணேசச் சுவடுகள்;

## கட்சியில் புறக்கணிப்பு

விடுதலை அடைந்தபின் நாட்டில் நடந்த
பொதுத் தேர்தல் இரண்டிலும் புறக்கணிப்பட்டார்

காமராஜரை எதிர்த்துக் கணேசர் தோற்ற
அற்றைநாள் நினைவுகளை ஆறவிடவில்லை சிலர்
வாய்ப்புக் கொடுத்தாலோ வளர விட்டாலோ
சிராய்ப்புத் தனக்கென சிலர் அன்று கருதினர்

அரசியல் சராசரியாய் அண்ணலை நோக்கிய
சராசரி அரசியலாரின் சாமர்த்தியம் அது
கோஷ்டிப் பூசலும் சிறுசிறு குழுக்களும்
காங்கிரஸ் வரலாற்றில் மாறாத காட்சிகள்
குறுகிய புத்தியொடு குழுச் சேர்ந்தவர்களின்
அருகில் நெருங்காத அண்ணல் கணேசனை
கண்டு பயந்தது காங்கிரஸ் தலைமை

இரண்டு தேர்தலில் இவரை ஒதுக்கி
அயலாரை நிறுத்தினும் "அவர்கள் தேசபக்தர்"
இயல்பாக ஏற்றார் ஏந்தல் கணேசன்
முயன்று சிலநண்பர் டெல்லி சென்று
முகாமிடத் திட்டமிட முளையிலேயே கிள்ளினார்
பதவி சுகம் வேண்டாப் பண்பாளர் கணேசன்
வெளிச்சம் எதற்கு விடியற் கதிர்க்கு?
தொண்டிலும் பேரின்பம் தொண்டருக்க உண்டா?

இராஜாஜி மந்திரிசபை இலங்கிய போதும்
இராஜாஜி மந்திரிசபை இறங்கிய போதும்
இராஜாஜி பக்தனாய் அவர் வழித் தொண்டராய்
தன்னை நிறுவிய தன்மையர் ஆயினும்
அரசியல் குழுக்களில் அகப்பட வில்லை
தனித்துவத்தோடு தானவர் தொடர்ந்தார்
ஆனால்!
ஐம்பத்தேழு தேர்தல் சோதனை ஆனது
அவருக்கு -
அவருக்கு மட்டுமா?

## 1957 - பொதுத்தேர்தல்

சுதந்திரத்தைச் சொர்க்கத்தின் வாயில் என்று
தோற்றுவித்த மாயையது விலகிப் போக
விதந்தறியாய் பெருமகனார் காந்தி அண்ணல்
வெடித்ததொரு கோட்சேயால் மாண்டு போக
அதுவரையில்ஆங்கிலேயர் அடியில் நின்றோர்
அதிகாரம் ருசித்தவர்கள் காங்கிரசாக
பொதுவுடைமைக் கட்சியினர் புரட்சி செய்ய
புதுநிலையை ஏற்காத போக்கு நாட்டில்;

மக்களாட்சி என்கின்ற மகத்து வத்தை
மட்டற்ற வாக்குரிமைத் துருப்புச் சீட்டை;
தக்கபடி பயன்படுத்தா மக்கள் முன்னர்;
தன்னிகரில் பெருந்தலைவர் நேரு பேரால்
எக்காள மிட்ட காங்கி ரஸ்காரர்கள்
இரண்டாகி மூன்றாகி தோற்ற மிட்டார்!
உக்கிரம மாய ஐம்பத் தேழில் தேர்தல்
உரித்துத்தான் காட்டியது பிரிவுப் பாங்கை;

தமிழிசைக்கும் கல்விக்கும் தலைமை யோடு
தம்பொருளை ஈந்துகாத்த அரசத் தோன்றல்
அமைதியான காரைநகர் பொது வாழ்விற்குள்
அபேட்சகர் ஆக்கப்பட்டார் காங்கிரஸ்காக;
தமையீந்த தியாகிகளை ஒதுக்கிச் சாதி
சம்பத்து, பலங்கருதித் தம் அணுக்கர்,
எமதன்பர் எனத் தேர்ந்து சிலரைக் காட்டி
இறங்கி வரல் ஆயிற்று கட்சிச் சால்பு.

ஆங்கிலேயர் அரசளித்த பட்டந் தன்னை
அடைந்தவர்கள் காங்கிரசில் சேர்ந்த போதும்
ஆங்கவரை ஏற்றல் கூடா தென்று முன்னர்
அண்ணலவர் கணேசனவர் முப்பத் தாறில்
ஓங்குவித்த தீர்மானம் மாற்ற வில்லை!
உயர்திருவார் இராசாசர் முத்தய் யாவைக்
காங்கிரசின் வேட்பாளர் ஆக்கி விட்டார்
கட்சிக்குள் எதிர்ப்பிருந்தும் காம ராஜர்!

தன்கொள்கை தன்முன்னே மாற்றல் கண்டு
தவப்பெரிய விடுதலையாம் வேள்வி தன்னில்
தன்சொத்து, தன்வாழ்வு, தனதனைத்தும்
தத்தங்கள் செய்து வந்ததும், தாம் நினைத்த
தன்மானச் சுதந்திரத்தை நாட்டில் காணா
தவிப்பாலே உருவான முடிவினாலே
தன்னூரில் காரைக்குடியில் சுயேச்சை யாகத்
சத்தியஞ்சேர் சா.க.வும் போட்டியிட்டார்!

ஒருபக்கம் இராஜாசர் குடும்ப வீச்சு;
ஒருபக்கம் கணேசண்ணல் தியாக மூச்சு
ஒருபக்கம் தொழில்ராஜ்ய ஆதிக்கங்கள்!
ஒருபக்கம் சுயராஜ்ய ஆவேசங்கள்!
மறுபக்கம் வாராமல் தமிழின் பக்கம்
மனம்வைத்த தமிழ்க்கடலாம் இராய. சொ. கூட
தெருப்பக்கம் மீண்டும் வந்தார் கணேசர்க் காக
தியாகிகளின் ஆரவாரம் கணேசர்க் காக!

பணபலத்தின் தாக்கங்கள், காங்க்ரஸ் ஆளும்
பதவிகளின் மூர்க்கங்கள், திட்ட மிட்டே
கணேசர்க்கு ஆதரவாம் சாவடிக்குள்
கலகங்கள், அலைக்கலைத்தல், அச்சுறுத்தல்,
திணையளவு கலங்காது போட்டி யிட்டும்
திசையெங்கும் பணம்கொடுத்து வாக்கு வாங்கும்
பணநெறியை இந்தியா கண்ட தன்று!
பலமடங்கு கூடியது காணும் இன்று!

தன்னையொரு சாதிக்காய் நிறுத்தா நெஞ்சத்
தவப்பெரிய பசும்பொன்னார் தேவர் ஆங்கு
தொண்ணூற்று ஆறு கூட்டம் பேசி நின்றார்!
தூயபெரும் ஜீவாவும் ராம மூர்த்தி
மண்மணக்கும் மணலி, எம் .கே., ஆர்.எச். நாதன்
மாநகரின் அபிசீனியா, சத்தி அண்ணன்,
கண்போன்ற பகத்சிங்கின் தியாகத் தோழர்
காணஅரும் அஜய்முகர்ஜி கலந்து கொண்டார்!

தமிழரசு நெஞ்சத்தார் ம.பொ. சி.யும்
தன்வெண்கல குரலினிலே முழக்க மிட்டார்!
இமைமூடா வல்லத் தரசான வீரன்
எரிநெருப்பால் காங்கிரசை வறுத்தெடுத்தார்!

தமை மறந்து உழைத்திட்டார் காரை மக்கள்;
    தாய்நாட்டின் சகலருமே ஆவல் கொள்ள
அமைந்திருந்த தேர்தலிலே கணேச அண்ணன்
    ஆயிரத்துச் சொச்சமான வாக்கில் தோற்றார்!

தேசபக்தன் தோற்றதனைப் பொறுக்காத் தேவர்
    தேர்தலிலே இருதொகுதி வென்ற தாலே
நேசமுடன் போட்டியிட சா. க. தன்னை
    நெஞ்சார அழைத்திருந்தார்; ஆனால் சா.க
"ஆசையில்லை எம்.எல்.ஏ ஆக, கொள்கை
    அறிவுறுத்தத் தான்போட்டி" என மறுத்தார்
தூசுகள்தான் பதவிகளே இருவருக்கும்
    சொல்லரிய பெருமையன்றோ கொடி பிடிக்கும்!

ஆங்கிலத்தில் செந்தமிழில் முழக்கும் தேவர்
    ஆன்மீக நெறியாளர் அரசுச் சோதி
ஓங்கி நின்ற இராஜாஜி தலைமை தாங்க
    உயர்திருவாம் சா. க. கையால் தான் இயற்றும்
பாங்கான நூலொன்றை வெளியீடாக்கி
    பாராட்டுத் தெரிவித்தார் சா.க. மீது
வேங்கைகள் தான் அம்மூவர், கொள்கை வாழ்க்கை
    விரிகின்ற வரலாற்றில் பதிந்த வாழ்க்கை.

பொதுவுடைமைக் கட்சியினரின் ஈடுபாட்டை
    பொதுத்தேர்தல் நடக்கையிலும் முடிவுதன்னை
எதிர்த்தன்று வழக்குமன்றில் நின்ற போதும்
    இணக்கமுடன் புரிந்துகொண்டார் கணேச அண்ணன்
மதித்தலைவர் ஜீவாவின், பி.ஆரின் நண்பர்
    மற்றவரையும் உள்ளூரில் பழநியப்பன்
இதமான நாராயணன், கருப்பஞ்செட்டி,
    சண்முகமென எல்லோர்க்கும் நெருக்கமானார்.

மாநிலத்துக் கம்யூனிஸ்ட் இயக்கத் தார்கள்
    மாநாட்டைக் காரைநகர் நடத்துதற்காய்
ஆனதன் இல்லத்தை அவர்க்களித்தார்
    அலுவலகம் அங்கேதான்; அவர் குடும்பம்
தான்வணங்கும் கோயிலிடம் கொட்ட கைக்குத்
    தான்ஒதுக்கி மாநாட்டிற்கு இடம் அளித்தார்.
போனதந்த அரசியலின் புரிந்துணர்வும்
    போகவில்லை நட்பன்பு இறுதி மட்டும்!

## 'கம்பன் திருநாள்'

வெண்ணெய்நல்லூர் சடையப்பன் வளர்த்த வேங்கை!
விரல்நுனியில் ஞானத்தை வரையும் செங்கை
தண்ணீராய்த் தமிழழகு பாயும் கங்கை!
தவப்பெரிய கவியரசி தாலாட்டும்கை!
விண்ணிருந்தே அவதாரம் செய்த கோவை
வெற்றிபெறு மானிடராய் விரித்த பாங்கை
கண்ணீரும் ததும்பிவரத் துதித்த செய்கை!
காரைநகர்க் கம்பர்விழா! கணேசர் சேவை!

திருவிழாக்கள் கோயிலிலே நடப்ப துண்டு!
தேரேற்றி ஊர்வலங்கள் வருவ துண்டு!
பெருவிழாக்கள் அரசியலார் வெற்றிக்காகப்
பெருந்திரளைக் கூட்டியங்கு நடத்தல் உண்டு!
ஒருவிழாவைத் தேரழுந்தூர்க் கவிஞர்க் காக
உயர்அறிஞர் பெருங்குழுவைக் கூட்டிச் சேர்த்து
அரும்விழாவாய் இயக்கமாக்கி உலகம் போற்ற
அமைத்தவிழா! அழைத்தவிழா கம்பர் விழாவே!

ஆழ்வார்கள் பெருமாள்மேல் காதலானார்!
அப்பர்தான் சிவன்மீது - பித்தாய்ப் போனார்!
மூழ்கி, விரி கம்பராழி முத்தெ டுத்த
முதிர் இளைஞர் கணேசண்ணல் கம்பர் பக்தர்!
சூழ்ந்ததன்று கம்பர்பேரில் விமர்சனங்கள்!
சொல்லவொண்ணாப் பகையுணர்வு எள்ளல்! கேலி!
வாழ்வித்தார் கம்பநெறி மாண்பைக் கூறி
வடித்துவைத்த துடிப்புவிழா கம்பர் விழாவே!

விசுவாவசு பங்குனியில் அத்த நாளில்
வெண்ணெய் நல்லூர் சடைப்பன் முன்னிருக்க
உசைபோலக் கவிவிரித்தான் கம்பன் அந்நாள்;
உயிர்விடுத்தான் நாட்டரசன் கோட்டை தன்னில்
வசமாக மகம் பூரம் உத்த ரத்தில்
வாழ்காரைக் குடிமண்ணில் விழா நடத்தி
அசலான அத்தத்தில் சமாதிக் கோயில்
ஆங்குசென்று பூசைசெய்து நிறைவும் செய்வார்!

கம்பருக்காய் ஒருபடத்தை வரையச் செய்தார்!
கணேசர்போல் மாணாக்கர்; டி.கே.சி.போல
கம்பீர மீசையுடன் கம்பர் தோற்றம்!
கம்பரது படம் தொடர்ந்து தமிழ்த் தாயார்க்கு
அம்புவியில் முதன்முதலில் திட்ட மிட்டே
அற்புதமாய் வரைந்தார்கள். ஓவியத்தில்
ஐம்பொன்னால் சிலைவடித்தார் கணேசர் திட்டம்
அறிஞர்கள், சிற்பிகளும் போற்றிட்டார்கள்!

தலைமறைவுக் காலத்தில், சிறை வாசத்தில்
தங்குதடை இன்றி விழா நடந்ததுண்டு!
இலைமறைவு காயாக மரபு மீறி
இயல்பான நாகரிகம் மாறிப் பேசின்
தலையாட்டி நிற்கமாட்டார் கணேசச் செம்மல்''
தமிழ்க்கொட்டுக் கொட்டிடுவார் சாத்தன் ஆக!
தலையான தமிழ்மேடை! அறிந்து சான்றோர்
தவப்பெரிய வாய்ப்பாகக் கலந்து கொள்வார்!

பொதுவுடைமைப் போராளி ஜீவா உண்டு!
புகழ்வாய்ந்த சிலம்பரசர் ம.பொ. சீயும்
அதிமதுரச் சொல் வேயும் அ.ச.ஞாவும்
ஆங்கிலத்தில் ஒப்புசெய்ய எஸ்.ஆர்.கேயும்
நிதிபெரிய ஜி.கே. எஸ்சும் நித்தம் உண்டு!
நீதிபதி இஸ்மாயில் பங்கும் உண்டு!
குதிபோட்டுக் குடுமிகட்டிக் தமிழை ஆண்ட
கோதில்லா இராதாகிருஷ்ண ஆசான் உண்டு!

மெய்யன்பால் மயிர்க்கூச்சம் செய்யும் பேச்சில்
மிளிர்கின்ற தமிழ்க்கடலின் தீர்ப்பும் உண்டு!
கைதொழுது கம்பராமன் கவிதை யுண்டு
க.கு.கோ., முடியரசன் முழக்க முண்டு
மெய்யான வ.சுப.மா. ஆய்வும் உண்டு
மிடுக்கான ரகுநாதன் உணர்ச்சி யுண்டு
செய்யமன மகராசன் ஞானம் உண்டு!
சிம்ம வீர. மெய்யப்பன்; அரசி உண்டு!

குற்றால மாமுனிவர் டி.கே.சி.யும்
குருதேவர் தெ.பொ.மீ; பி.ஸ்ரீ தாமும்
முற்றுஞானி முருகப்பாவும் முன்னர் உண்டு!
முத்தான தமிழண்ணல், அரு. சோ. ரஹ்மான்,

கட்டாயம் கண்ணப்பன் அமிர்த லிங்கம்
கவியருவி மரியதாசன் சொ.சொ.மீ. உண்டு!
சிட்டான சிவனடியான் பாப்பய் யாவும்
செம்மைமொழி சுந்தரராமசாமி உண்டு!

அழகான தமிழ்பேசும் இந்திரா அம்மை
அ.சீ.ரா; தொண்டைமான், புதுவை மண்ணின்!
தழல் அருணகிரி, அறிவு ஒளியார், கீரன்
சரசுவதி இராமநாதன், தூரன், சீலன்
குழல் போல சிவகாம சுந்தரி, தோழர்
குமுறுமிடி முழக்கமாய் தா.பா, வள்ளல்
வளாகத்துச் சாரங்கபாணி, தேசிகன் , மாறா
வாஞ்சையுள்ள நமசிவாயம், குழந்தை நாதன்;



கரந்தைபுகழ்க் கவியரசு, கி.வா.ஜ; நாட்டார்,
கதிரேசர், பால்நாடார், முகவை நாட்டின்
சிறந்திருந்த பேர் இராகவ அய்யங்கார்கள்,
செந்தமிழர் இசைபரவி ஓங்கி நின்ற
தரம் மிகுந்த தண்டபாணி தேசிகர், ஓகை
தான்மிகுந்த தனிநாயக அடிகள்; ஈழப்
பெருநிலத்தின் கா.பொ.ரெத்தினத்தார், கண்ட
பேரறிஞர் பட்டியலோ விரியும் இன்னும்!

வாரியாரின் கதைவிளக்கம் இரவில் உண்டு!
வற்றாத எம்.எஸ்ஸின் பாட்டும் உண்டு!
வேறுயாரும் நேரிலாத ராஜா ஜீயும்
விசயமுள்ள அமைச்சர்களும் செல்வர் தாமும்
மாறுபட்ட கொள்கையர்கள் நட்பி னோடு
மதிக் கம்பன் தனைப்போற்றி நிற்றல் உண்டு!
வேறுபாடு காணாமல் இந்து, இஸ்லாம்
வியன்கிறித்து நாத்திகர்கள் பங்கு முண்டு.

கம்பர்கவி பத்மா சுப்ரமணியம்தான்
கவினார்ந்த பரதமென ஆடல் செய்வார்!
கம்பனது பல்வேறு பாத்திரத்தைக்
காட்டுடனே நுட்பமுள்ள ஆய்வு செய்வார்!
கம்பனுக்கும் பலமொழியில் இராம காதைக்
கவியினுக்கும் வீக்கதூக்கம் எடுத்துரைப்பார்!
கம்பனவன் வள்ளுவனை, முன்னர் வாழ்ந்த
கவிஞர்களை வாங்குவித்த நேர்த்தி சொல்வார்!

இராமநெறி மானுடத்தை எடுத்து ரைப்பார்
இராவணன் மாட்சிவீழ்ச்சி தொகுத்து ரைப்பார்
பராவு புகழ்ச் சானகியைத் தாரை தன்னை
பல்வேறு பெண்பாத்திரத்தைக் கூறி
உராயுவகை பட்டிமண்டபத்தில் பேசி
ஒலிப்பதெல்லாம் கம்பர்திறம் ஒன்றே கூறும் !
தராதரங்கள் பார்ப்பதற்கு நோக்கர் உண்டு!
தமிழ்நெஞ்சர் சே.மு.கமால். ஆங்கே உண்டு!

பழந்தமிழில் ஆழ்பெரியோர் அறிவருந்திப்
பழகுகின்ற இளைஞரையும் கண்டெடுத்தே
உளம்பதித்தே உருவாக்கிக் கணேசர் கண்டார்!
உயர்வுடனே அவர்தடத்தில் நடக்கும் செம்மல்
வளம்பெருக்கும் 'கம்பனடி சூடி' என்னும்
வற்றாத பற்றாளர் பழநியப்பன்
உளவிசய ராகவனும் அரு.நாகப்பன்
உற்சாகப் படைவரிசை வளரக் கண்டார்.

## (வேறு)

பட்டி மண்டபம் என்றொரு பாணி
பாங்குறத் தந்தது கம்பனின் மேடை !
உற்ற கருத்தினைக் கவியரங் காக்கி
ஒலிக்க வைத்ததும் கம்பனின் மேடை!
திட்டு விளக்காய்த் திருநாள் மங்கலம்
தேவ பூசையாய் நடந்திடும் மேடை!
சிட்டுகள் கூடி மலர்களைத் தூவி
செந்தமிழ், கம்பனைப்போற்றிடு மேடை!

உண்ணா நோன்பு உபவாச மிருந்து
உறுதியாய்க் கணேசர் துலக்கிய மேடை!
கண்ணி மைத்துளியும் தாமதிக் காது
காலம் போற்றிய கணேசர் மேடை!
எண்திசை யிருந்தும் கடல்வெளி கடந்தும்
ஏராள மானோர் தேடிய மேடை!
பண்டைத் தமிழ்நெறி மரபு போற்றிய
பாரத நாட்டின் ஈடிலா மேடை!

சிற்பி செதுக்கிய சிற்பம் போலச்
சிங்கார மான அலங்கார மேடை!
விற்பனன் ஓவியம் வண்ணம் குழைத்து
வேந்து கணேசன் வேய்ந்தஅம் மேடை!
செப்பும் நிகழ்வை ஒப்ப மாறியே
'செயவிசையீபவ' செய்யும் மேடை!
ஒப்பனை யின்றி உண்மையில் தோய்ந்த
உயிர்மகன் இன்றும் உலாவும் மேடை!

சீர்மைக் கலைஞர் ஏறிய மேடை!
செம்மை எம்.ஜி.ஆர் போற்றிய மேடை!
கார்வை மாறாத நாதசுரமாக
கவிகண்ணதாசன் பாடிய மேடை!
வேர்வை ஊறிடத் தொண்டர்கள் எல்லாம்
விருப்ப மொடுவந்த திருப்ப மேடை!
சோர்வை அகற்றிச் சோறும் போட்டுச்
சுவையுண வளித்த கம்பனின் மேடை!

வேடிக்கை விளையாட்டு பட்டாப் போட்ட
வெற்றுரை யாளர் கூட்ட மில்லை!
கோடிப்பொன் காட்டிக் கூப்பாடு வேட்கும்
கோணல் மனத்தவர் நாட்ட மில்லை!
நாடிக் கம்பனை ஏற்றிப் போற்றிடு
நாத்திகர் எனினும் மறுப்பு மில்லை!
மூடிய நெஞ்சர் இல்லை கணேசன்
முற்றிய ஞானி! ஒப்பு மில்லை!

## (வேறு)

கம்பனைப்போல் காசியினில் கவிஞன் இல்லை!
கம்பர்திரு நாள்போல விழாவும் இல்லை!
கம்பனது கழகம்போல் உலகமெங்கும்
கதிர்பரப்பிக் கிளை விரித்த கழகம் இல்லை!
கம்பநாடன் இராமனுக்கு: கம்பனுக்கே
கணேசன்தான்! மூன்றுபேரும் புகழி னோடு
அம்புவியில் நின்றிருப்பார்; ஆழி, ஞாலம்
அரியநறும் தமிழ்போல வாழ்வர் நாளும்!

கம்பனே நீ வாழ்க! கம்பன் அடிப்பொடியார்
செம்பியன், அன்பன், செயல்வாழ்க-கம்பனின்
மண்டபம் வாழ்க! மணித்தமிழ்த் தாய்க்கோயில்
செண்டாக வாழ்க சிறந்து!

## காந்தி மண்டபம் - (சென்னை அடையாறு)

மூதறிஞர் இராஜாஜி முதல்வராக, அரசினரின்
ஆதரவில் அமைத்ததொரு அருஞ்சிறப்புக் கலைப்படைப்பு
ஆளுநர் மாளிகையில் அருகிலுள்ள மண்டபந்தான்
மாகலைஞர் வைத்தியநாத ஸ்தபதிதன் கையால்
காந்தி மண்டபத்தைக் கட்டுவித்தார் சா.க.
சிற்பக் கலையின் சிறந்த கட்டுமானத்தைக்
கற்கள் பேசுகின்ற கலைமகளின் பொக்கிசமாய்!
இராஜாஜி முன்னிற்க, காமராஜ் தலைமை கொள
சா.க. சாதித்த தமிழ்க்கலையின் பீடமது!
'அண்ணா' என்றழைத்து அவர்நாளும் போற்றிவந்து
கண்ணான வைத்திநாதக் கலைஞரின் படைப்புமது!
பின்னாளில் ஸ்தபதிமகன் கணபதியார் கணேசரால்
எந்நாளும் மறையாத ஏராளக் கலைச்செல்வம்
நாட்டிற்கு அளிக்கவே நாட்டிய கால்கோள்அது
ஏற்றமிகு காந்திக்காய் இயற்றிய கோயிலது!

## மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி

பண்டைத் தமிழ் நாட்டின் பாரம்பர்யக் கலையாகி
எண்டிசையும் அழியாதே என்றும் திகழ்கின்ற
சிற்பக் கலைத்திறன்கள், சிறந்த கலைவல்லுநர்கள்,
எப்போதும் பெருகிவர ஏற்றதொரு கல்விதர
அற்புதமாம் மல்லையிலே அழகான கல்லூரி
தொடங்கத் திட்டமிட்டுத் தொன்மை விழை இராஜாஜி
முதல்வரை அணுகியே முடித்து வைத்தார் சா.க.
மல்லை நகரினிலே மறுமலர்ச்சி கண்டிட்டாள்
கல்லிலே வாழுகிற கலையரசி சிற்பத்தாய்;
வைத்திய நாதரெனும் வளமான பெருங்கலைஞர்
சைத்ரிகர், சிற்பி கல்லூரி முதல்வரானார்
பூர்வீகக் கலைகளைப் புதுப்பித்து உயிர்கொடுத்த
தார்மீகன் கணேசன் சாதனைக்கு ஒரு சாட்சி.

## இளையாத்தங்குடி 'சதஸ்' தொண்டர் குலசேகரன் சா.க.

நோன்புகள் தவறாது நூறாண்டு வாழ்ந்திருந்த
ஆன்பால்போல் தூயர், அத்வைத நெறியாளர்
பரமாச்சார்யார் எனப் பக்தர்கள் கொண்டாடும்
பிரம்மகுல குரு பெரியவர்கள் அக்காலம்
இளையாத்தங்குடி என்னும் ஏற்றமிகு சிற்றூரில்
விளையவைத்த 'சதஸ்' என்னும் வேள்விப் பொறுப்பை
பன்னாட்டார் கூடிப் பங்குபெற்ற பெரு நிகழ்வில்
தென்னாட்டுச் சிறப்பைச் செட்டிநாட்டு உபசரிப்பில்
சா.க. நிறைவேற்றிச் சாதித்த அருமையினை
ஆக்க பூர்வமாய் ஆற்றிட்ட தொண்டுகளைப்
பார்த்துப் பூரித்துப் பரமாச் சார்யாரும்
கீர்த்தித் 'தொண்டர்குல சேகரன்' என அழைத்தார்.
பின்போ, முன்போ பெரியவர்தம் கையால்
அன்போடு அவ்விருதை யார்க்கும் அளிக்கவில்லை.
காஞ்சித் திருப்பணியைக் கணேசர் தானியற்ற
தான்செய்த தவப்பணியாய்த் தான் மகிழ்ந்தார் பெரியவரும்.

## சுதந்திராக் கட்சி - சட்டமன்ற உறுப்பினர்

காங்கிரசை எதிர்த்தன்று போட்டி யிட்ட
    காங்கிரசுக் காரரெல்லாம் சேர்ந்து பின்னர்
காங்கிரசு சீர்திருத்தக் கட்சி ஒன்றைக்
    கட்டினார்கள் கணேசரின் தலைமையின் கீழ்;
காங்கிரசில் வெளியேறி இராஜா ஜீயும்
    கனமான சிந்தனைசேர் மசானி, ரங்கா
ஆங்கிருந்த பிலுமோடி போன்றோர் கூடி
    ஆரம்பித்த சுதந்திராவில் அழைக்கப் பட்டார்;

பழமைவாதம், சோசலிசம் எதிர்த்த போக்கு,
    பரவலாகத் தனிஉடைமை போற்றல்; என்றும்
எழுகின்ற உடமையெல்லாம் சமூகத்திற்கே
    என்கின்ற சமதர்மம் மறுத்தல், நாட்டில்
மொழிக்கொள்கை என்றவொரு கொள்கை இன்றி
    மூத்தவர்கள் தனித்தனியாய்க் கொள்கை பேசல்
கொழிஅறிஞர் இராஜாஜி தலைமை தாங்கக்
    கொள்கையெலாம் தனிமனித சுதந்திரம்தான்.

பெருவாரி மக்களுக்காய் நியாயம் பேசார்;
பிரகாச மானசிலர்க் காக நின்றார்
வறுமையதன் பிடிச்சிக்கித் தவித்தார் பல்லோர்,
மன்னர்கள் மானியத்தை இவர்கள் வேட்டார்;
இருவர்க்கம் தனில் இவர்கள் ஏழை வர்க்கம்
எனும் வர்க்கம் தனைப்பற்றிக் கவலை கொள்ளார்,
உருவாக்கும் இக்கட்சி முகத்தைக் காக்க
உயர்வான சா.க.வைத் தேர்ந்தெடுத்தார்.

காங்கிரசின் போக்கினிலே வெறுப்புக் கொண்டார்
காந்தமிகு இராஜாஜி சொல்லைத் தட்டார்
தாங்கிவிட்டார் தமிழகத்தில் தலைவர் ஆக
சா.க.வின் பணியாலே கட்சி ஓங்கும்;
தேங்காமல் சட்டமன்றப் பணிகள் செய்யத்
தேர்தலிலே வென்றிட்டார் அறுபான் ரெண்டில்
ஓங்கிற்றுச் சட்டமன்றத் தொண்டும்; அன்று
உருவான எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்!

## 1967-1972 சட்ட சபையில்

சட்ட மன்றம் கௌரவம் பெற்றது
சா. கணேசன் உழைப் பாலே
திட்ட மிட்டுச் சுட்டிக் காட்டித்
தேர்ந்து சொல்வார் தெறிப்பாலே
சுற்றி நின்ற அமைச்ச ரெல்லாம்
கூர்ந்து நோக்க வைப்பாரே!
கற்ற தெல்லாம் கற்றுக் கொடுப்பார்
கணேசர் அறிவுச் சிறப்பாலே!

அமைச்சர்க் கெல்லாம் அவர்மேல் இருந்தது
அளவில் லாத மரியாதை
இமையும் மூடாது அவர்சொலும் கருத்தை
எடுத்துக் கொள்வார் சரியாக
தமிழின் அழகில் சத்தியச் சுடரில்
சா. கணேசன் பேச்சுக்கள்
தமது கட்சிப் பார்வையை மீறித்
ததும்பும் நாட்டுப் பற்றுக்கள்!

காம ராஜர் பக்தவத் சலம்
காங்கிரஸ் ஆட்சிக் காலங்கள்
மாமன்றில் அடிதடி கூச்சல்
மறித்தல் இல்லா நேரங்கள்
தூய்மை மனத்தராய் கணேசர் அன்று
சொல்லிப் பதித்த வாதங்கள்
பாமரர், படித்தவர் அவையினர்; கூடிப்
பார்த்து வியந்த சீலங்கள்.

அறிநிலையத் துறைகல்வி தொழில்கள்
அரைஆடை இல்லா உழைப்பாளி
திறம்பெறப் பொருளியல் நிதிநிர் வாகம்
தெளிந்து உரைத்துக் கொடுப்பாரே!
உரமிகு கலைஞர், ஓயா எம்.கே.
உயர்வாய்ப் பலரும் இருந்தாரே!
தரமிகு கணேசர் சட்ட மன்றத்துச்
சாதனை கண்டு நிறைந்தாரே!

மலைத்திட வைக்கும் இந்திய நாட்டின்
மாண்பினைக் குறைக்கும் எரிமலையாய்
குலைத்திடும் சாதிக் குமுறல் பிரிவினை
குறைத்திட என்ன செய வேண்டும்?
கலப்பு மணத்தைக் கட்டாய மாக்கக்
கணேசர் சபையில் குரல் கொடுத்தார்
இளைப்பே அறியா இதய உறுதியை
எடுத்துக் காட்டி இடி இடித்தார்;

பழம்பெரும் தியாகி இராஜாஜி கட்சி
பாசாங் கில்லா அரசியலார்
உளமாரச் சொன்ன சாதி ஒழிப்பின்
உன்னத உண்மைப் பேருரைகள்
கலகல வென்று கைகள் தட்டிப்
பெரியார் இயக்கம் வரவேற்றார்!
களமிது கம்பன் காட்டிய ராமன்
காட்டிய பாதை வழி என்றார்!

ஆழ்ந்து கிடந்தன அழிந்தும் வந்தன
ஆன்றோர் காலச் சிற்பங்கள்
வீழ்ந்தும் மண்ணில் புதைந்தும் கிடந்தன
பண்டைக் காலச் செல்வங்கள்

வாழ்ந்திடச் செய்ய பழம்கலை காக்க
வடிக்க வேண்டும் திட்டங்கள்
ஏந்தல் கணேசன் ஏற்பா டாலே
இயற்றப் பட்டன சட்டங்கள்!

தொல்பொருள் ஆய்வுத் துறையெனும் ஒன்றைத்
தோற்றுவிக்கக் காரணமாய்
சொல்பொருள் நிறைந்து சட்டத் தேவையை
சொன்னார் கவிதைத் தோரணமாய்!
நல்லரசு அன்று பக்தவத் சலனார்
நாட்டிய சட்டம் பூரணமாய்
வல்லார் கணேசன் வாழ்நாள் மகிழ்ச்சி
மனதிற் பிளிறிய வாரணமாய்!

திருமலைப் பிள்ளை வீதியில் வாழ்ந்த
காம ராசர் வீட்டுக்கு
ஒருமுறை முன்னர் அறிவிப் பின்றி
சா.க. சென்றார் காணற்கு!
வருவதை அறிந்த காமராசர்
வழித்த பாதி முகத்தோடு
வர வேற் றாராம் கணேச அண்ணலை
மரியாதை அன்பு மனத்தோடு!

வேண்டிய தெல்லாம் நாட்டிற் காக
ஏதோ சிற்சில விருப்பங்கள்
வேண்டும் பொழுதே கட்டளை இட்டது
காம ராசரின் விழுப்பங்கள்
ஆண்டவர் எதிர்ப்பவர் என்ற பார்வை
அன்றைக்கில்லை யாருக்கும்!
மாண்பிற் சிறந்த மானிடம் அரசியல்
வாழ்ந்து வந்தது ஊருக்குள்!

அறமே பார்வை! அறமே பாதை!
அறந்தான் அவரின் உயிர்மூச்சு!
அறத்தில் வடிவாம் அண்ணல் காந்தி
கொள்கை அவர்க்குச் செல்வாக்கு!
அறம் வளர் இராமன், குறள்நெறிக் கம்பன்
அதனால் அவன்தான் உயிர்த்துடிப்பு!
அறத்தின் சாரமாய் ஆன சிகரமாய்
ஆனது கணேசர் நெடுங்கணக்கு!

திரண்ட பெரும்பொருள் தேர்ந்த செல்வர்கள்
சேர்ந்த கட்சிப் பொறுப்பாளர்!
இரண்டு கருத்திலை கட்சிச் செல்வம்
இவரிடம் இருந்தது நிறைவாக!
உருண்ட தம்பிடி ஒன்றைக் கூட
ஒதுக்கிய தில்லை மறைவாக!
இரண்டு வேட்டி துண்டுடன் வாழ்ந்தார்
இணையார் இவருக்கு நிகராக?

சமூக வாழ்க்கையில் தன்னைப் பிணைத்தவர்
சமூகச் சொத்தை அடைந்ததில்லை
உமியள வேனும் உற்ற பதவியால்
ஊரில் துயரம் கொடுத்ததில்லை
சுமையாய்ப் பிறர்க்குச் சூதாய்ச் சிலர்க்குத்
தூயவர் நாட்கள் கழிந்ததில்லை
தமையாள் தலைவன் கம்பன் தமிழென்ற
தடத்தில் இருந்து புரண்டதில்லை!

சடையப்பன் பிறந்தான் காரை மண்ணில்
சா.கணேசன் எனவந்தான்
மடையொப்ப மாகவி கம்பனும் வேண்டி
மற்றொரு பிறவி எடுத்து நின்றான்
கொடையப்பன் உள்ளக் கோடிலி அப்பன்
குறள்நெறி அப்பன் கணேசனாம்
உடையப்பன் தமிழில் உயிரப்பன் கம்பன்
உயர்வப்பன் ஆனார் கணேசனாம்.

கோயிலில் ஏற்றிக் கோபுரம் கட்டிக்
கணேச அண்ணலைக் கும்பிடலாம்
ஆயும் தமிழினில் ஆயிரம் பாடல்
அவர்மேல் பாடல் கொண்டிடலாம்
சாயுதல் வரைக்கும் சமரசம் இல்லாச்
சத்திய நெறியைப் போற்றிடலாம்
ஆய கம்பனின் மண்டபம் அதனில்
அவர்நின்று நிலவக் கண்டிடலாம்.

வாழ்நாள் முடிந்தும் வாழ்பவர் சிலர்தான்
தமக்காய் வாழ்ந்தவர் அவரில்லை!
ஆழக் கடலில் வீழ்த்திய போதும்
அழிந்து போவார் அவரில்லை!

ஏழை, செல்வர், சாதி, எனும் தடை
நீக்கி நிற்கும் புகழ் எல்லை
வாழிய கம்பன்! வாழிய அடிப்பொடி!
வாழிய தமிழே வாழியவே!

## 1967-72

சட்ட மேலவை-உறுப்பினர்
தமிழ் மாநாடு-இதர பணிகள்

அண்ணா இராஜாஜி அமைத்த கூட்டணி
அறுபத்தி யேழில் வெற்றி கண்டது
செந்நாச் செம்மல், அண்ணல் கணேசன்
தேர்தலில் வென்று மேலவை சென்றார்!
அந்நாள் ம.பொ.சி. மேலவைத் தலைவர்;
அண்ணா, கலைஞர், அன்பழகன் எனத்
தென்னன் தமிழைச் சிறப்புறப் பேசும்
தி.மு.க. ஆட்சி உதய மானது!

மேலவை உறுப்பினர் கணேசர் ஆற்றிய
மேன்மையை ம.பொ.சி. பின்னர் சொன்னார்!
சாலச் சிறந்த 'பார்லிமெண் டேரியன்
தன்னரும் வாதத்தால் நுண்ணறி வாளர்!
ஆல மரமாய் வளர்ந்தே இருந்த
ஆளும் தி.மு.க. அணியும் அவரின்
சீலம் அறிந்து செப்பிய ஒப்பி
செயற்பாடுகளில் திறமை கொண்டது!

அரசுத் துறையில் மருத்துவ மனைகள்
அகன்ற வீதிகள் நீர்நிலை, குடிநீர்
விரசாய்ச் செல்ல பேருந்து வகைகள்
மின் தொடர்புகள் கல்வி வசதிகள்
பெரிசாய்ச் சிறிசாய்ப் பிழையிலாப் பணிகள்
பெரிதும் சா.க. தொகுதியில் பெற்றார்
இருசபை தனிலும் உறுப்பினராகி
இயற்றிய பணிகள் மக்களுக் கானவை!

முதலாம் உலகத் தமிழ்மா நாடு
முனைந்து நடந்தது மலேயா நாட்டில்
அதிற்கலந் திருந்த அறிஞர் குழுவில்
ஆங்கில மொழியில் கட்டுரை ஒன்றை
இதயம் கவர்ந்த கல்வெட் டியலை
எல்லோரும் அறியப் பலவாறு ரைத்தார்
புதிய துறையைப் புதிய வழியில்
புரிந்துகொள்ள வழிகள் அமைத்தார்!

மேனாட் டறிஞர் தமிழ்மொழி தன்மேல்
மீதுறு காதலால் ஆய்ந்த வல்லுனர்,
தாய்நாட் டில்வாழ் தமிழ்ப் பெருமக்கள்,
தமிழ் ஈழத்தின் தவப்பெரும் அறிஞர்,
ஆயநல் அவையில் அறிஞர் கணேசன்
அளித்த விளக்கமும் கருதப் பெற்றது!
தோய மலேயாவில் தொடங்கிய அப்பணி
தொடர்ந்து சென்னை இரண்டாம் மாநாடு!

பள்ளி, கல்லூரி, படிப்பெனக் கணேசன்
பயின்று நுழைந்து படித்ததே இல்லை
உள்ளத் துடிப்புடன் ஒவ்வொரு துறையிலும்
உற்று நோக்கிப் பெற்றார் அறிவை!
கல் வெட்டியலில் அவர்போல அறிஞர்
கனித்தமிழ் நாட்டில் இருந்ததே இல்லை
பல்கலைக் கழகம் பல்துறை அறிஞர்!
பயில வந்தனர் கல்வெட்டியலை.

அறிஞர் பெருந்தகை அண்ணா ஆண்ட
அற்றை நாளில் நடந்த மாநாடு
செறிந்த தமிழின் சிறப்பை எல்லாம்
செகத்திற்கோதிய யுகப்பெரு நிகழ்வாம்
விரிந்த கடற்கரை வெண்மணல் வெளியில்
வியன்பெரு கவிஞர் சிலைகளை அமைத்தார்
செறிந்த அறிஞர் செம்மல் கணேசன்
சிறந்ததோர் கண்காட்சி அமைத்துக் கொடுத்தார்.

கம்பனில் ஆர்வம் பலகலைகள் ஆர்வமாய்
காணும் தாவரம் விலங்குகள் நுட்பமாய்
பம்பை, உடுக்கை பயில்நாத சுரங்கள்
பரதம் ஆங்கே பயின்ற விதங்கள்

தம்மரும் அறிவால் தமிழ்த்தாய் சிறப்பை
தமிழ்ப்பண் பாட்டைச் சகலரும் அறிய
தென்தமிழ்ச் சென்னை தமிழ்மா நாட்டில்
செப்பரும் கண்காட்சி தப்பா தளித்தார்.

எழுத்தின் கோலம், எழுதினார் விவரம்,
சமணப் படுக்கைகள், சரித்திர இருக்கைகள்
வழுத்திய மன்னர் வடித்த இலக்கியம்
வானியற் குறிப்புகள் கணித்துக் காலம்!
அழுந்திய பூம்புகார்க் கடலில் மூழ்கி
அகழ்வா ராய்ச்சியில் கிடைத்த உண்மை,
முழங்கிய பண்கள், மொழிந்த பாடல்கள்
முற்றும் அவரே கற்று விளக்கினார்!

அரசியல் வேறுபாடு ஆயிரம் இருப்பினும்
அன்னைத் தமிழெனும் ஒற்றைக் கொடிக்கீழ்
முரசு கொட்டியே ஒற்றுமை பேணி
முத்தமிழ் இலக்கியச் சித்திரம் காட்டி
அரசு, மக்கள், ஆன்றபல் கலைகள்
அணிகலன், படைக்கலன், ஐந்திணை வாழ்நிலை
உரைசெய் ஆசான், உற்சவம், தெய்வம்
உணவு வகைகளின் உன்னதம் காட்டினார்!

ஆதி அகத்தியன் தொல்காப் பியன்என
அற்றைநாள் கண்ட பெற்றி யாளர்
ஓதிய இலக்கணம், ஓம்பிய விரதம்
ஒழிந்து போன பழம்பெரும் கலைகள்
சேதியர், சோழர், பாண்டியர், சேரர்,
சேருமுன் வாழ்ந்த வேளிர் வேந்தர்
மூதுரை யாளர், முத்திரையர்கள்
முத்திரை பதித்த சித்தரைத் தந்தார்.

ஆல யத்தின் கல்வெட் டுக்கள்
அகழ்வா ராய்ச்சிப் பயன்சொத்துக்கள்
காலம் அழிந்த அளவைமுறைகள்
காலம் புதுக்கிய குலவ்ரை முறைகள்
வாழும், மறைந்த கணக்கின் ஏடுகள்
மாறித் தோன்றிய இலக்கணச் செழுமை
கோலத் தமிழரின் கோதிலாக் கலைகள்
கூறிச் சிறந்தது அக்கண் காட்சி!

தங்க வாகனம், வெள்ளி வாகனம்
 தமிழ்நாட்டு ஆலயம் தானறி நகைகள்
எங்கெங்கிருந்தோ எடுத்து வந்தார்
 இன்காட்சி முடிந்தபின் திருப்பிக் கொடுத்தார்
சங்ககாலம், மருவியகாலம்
 சமணர் சைவ வைணவர் காலம்
அங்கு வந்தவர் சென்று வந்தனர்
 அருங்கண் காட்சியில் கண்டு வந்தனர்!

மொழி, நாகரிகத்தை முதன்மை செய்து
 மூழ்கிய தெல்லாம் மீட்டே எடுத்து
அழிந்த திலிருந்து ஆக்கம் பெற்ற
 ஆர்வ இளைஞர் அறிமுகம் கொள்ள
வெளிநாட் டார்க்கும் விளக்கம் கொடுத்த
 விவரமாய்க் 'கையேடு' அறிவுப் புதையலாய்
துளித்துளி செய்திகள் ஞானக் கடலாய்
 தோற்றிக் கொடுத்தார் ஆற்றல் கணேசர்!

உலகத் தமிழர் பாரிசில் பின்னர்
 ஓங்கி நடத்திய மாநா டதனிலும்
பலகற்றறிந்த பணிபார் கணேசன்
 பங்கு பெற்றுச் சிறப்புகள் செய்தார்!
திலகம் அவரது திறமை எல்லாம்
 திட்ட மிட்டு வரைமுறைப் படுத்தி
இலகி வந்ததோ ஏராள மாகும்
 இதன்வழி நடந்தால் வெளிச்சம் மேவும்!

## 1968-1970 அறுபான் ஆண்டு நிறைவு
## கம்பன் மணி மண்டபம்

ஈரேழு வயதினிலே தொடங்கிவிட்ட
 இணையற்ற பணிகள் தொண்டு
போராக யுத்தமாகப் பலநேரம்
 புத்தநெறிச் சாந்த மாக
நேராக நடந்துவந்து அறுபானாம்
 நிறைவயதை அடைந்த போது
ஏராளர் திட்டமிட்டார் கணேசர்க்காய்
 எழில்மணி விழாவைக் காண!

தேர்ந்தெடுத்த நிர்வாகி சி.வி.சிடி.வி.
ஜீ.கெ.எஸ்., ஆனா சோனா,
சூழ்ந்திருந்த நண்பர்கள் வலியுறுத்த
தூயமகன் மறுத்து விட்டார்!
பாந்தமுள்ள சிலர்பணமும் சேர்த்துவிட்டார்!
பக்குவமாய்ச் சொன்ன பின்னே
சாந்திக்குப் பதிலாக மண்டபத்தை
தான்கட்டச் சம்ம தித்தார்!

அறுபத் தெட்டாம் வருடம் அன்பரெலாம்
அளித்திட்ட ஓரி லக்கம்
தருமத்தால், நகர்த்தலைவர் சித.சித.வின்
சால்பான ஒத்துழைப்பால்
சிறுவித்தைப் பெரிதாக்கும் செயல்திறமை
சேர்வித்த சீ.வி.சீட்டியால்
ஒருமித்தே எழுபதான ஆண்டினிலே
உருத்தொடக்கம் கால் கோள் செய்து!

நெடுஞ்செழியன், மதியழகன் கல்வி, நிதி
நிர்வாகம் செய்அமைச்சர்
அடிக்கற்கள் நாட்டிவிடக் காரைநகர்
அழகுபெறக் கட்டு மானம்
தொடங்கிற்று; வணக்கவுரை வரவேற்றுச்
சொல்லாற்றும் கணேச அண்ணன்
படம்பிடித்துக் காட்டினார்கள் தன்திட்டப்படி
பாங்கான மண்ட பத்தை!

தெறித்திட்ட அருஞ்சொற்கள்; நெஞ்சிருந்து
தெளித்திட்ட பன்னீர்ப் பூக்கள்
உரித்திட்ட முக்கனியில் தேன்கலந்து
உருவான மழைத்தேன் பேச்சு
கருத்திட்டு தன்ஆன்மக் காதலிட்டு
கம்பமணி மண்ட பத்தின்
உருத்திட்டம் அவர்சொன்ன பாங்கதனில்
உதித்திட்ட வானாள் வேட்கை!

மணி மண்டபம் துலங்கும் நாற்புறமும்
மகிழ்கலைக் கூடங்கள்; தென்பால்
அணிவிக்கும் தமிழ்த்தாய்க்கு உலகத்தில்
தானெழுப்பும் முதலாம் கோயில்;

பணிதொடர எழுத்தியலை எண்ணியலை
　　இலக்கணத்தைக் கோணி லையை
மணியான சிற்பத்தைப் படிமத்தை
　　மலர்விக்கும் கல்வி தோன்றும்!

கம்பனுக்காய் கணேசர்க்காய் அள்ளிஅள்ளிக்
　　கவின்தமிழர் கொடுத்திட் டார்கள்
நம்பிஅவர் தாள்வணங்கி நன்றிசொல்லும்
　　நாயகரின் நற்றாய் உள்ளம்
தன்பின்னே, தன்சொத்து, தன்னுடைமை
　　தமிழுக்கென் றுறுதி செய்தார்!
பொன் பின்னே போதாதார் புகழ்,பதவிக் கேங்காதார்,
　　பொய்யற்றார், மெய்யர் சா.க.!

கனவரசன் கம்பனைப்போல், கனவுகண்டார்
　　காண் அரங்கில் எடுத்து ரைத்தார்
மனவோசை சுருதியிட வாய்மலர்ந்த
　　வார்த்தைகளோ பாட்டாய் ஆகும்
நனவாக ஆயிற்றா கணேசாசை?
　　நடக்கிறது! நடக்கும் மேலும்!
தனவந்தர் மனம்வைக்கத் தமிழ்நெஞ்சர்
　　தவம்பலிக்க தாயே காக்க!

முன்புமொரு தொண்டரடிப் பொடியுண்டு
　　முகுந்தனவன் பெருமாள் ஆழ்வார்!
கம்பனடிப் பொடியானார் கணேசண்ணல்
　　கம்பனவன் நினைவில் ஆழ்ந்தார்!
தம்பெயரைத் தானிழந்து கம்பநாடன்
　　தன்னிழலாய் ஆகி விட்டார்!
தம்தெய்வம், தன்ஆசான், தன்அப்பன்
　　தானேயாய் மாறிப் போனார்!

## இராசராசன் சதய விழா

மதிமன்னன் இராசராசன் தேவா ரங்கள்
　　மதிலுக்குள் இருந்ததைச் சிறைவிடுத்தோன்
அதிதூரம் கடல்கடந்து படையெடுத்தே
　　அதிகார அரசுகளை விரிவு செய்தோன்

புதிதாக வேளாண்மைத் திட்டம் தீட்டி
   பூம்புகார் சேர் சோழநில வளங்கள் சேர்த்தோன்
அதிசயமாய் பெருவுடையார் கோயில் கட்டி
   ஆயிரமாம் ஆண்டுகளாய்ச் சரிதம் கண்டோன்

பெருநந்தி, பெரும்லிங்கம் பெரிதாய் எல்லாம்
   பிறப்பித்த இராஜராஜன் தமிழர் வாழ்வில்
அருமைந்தன், கலைப்பித்தன், கோயிலுக்காய்
   ஆயிரமாய்ப் பொற்செலவு நிலங்கள் ஈந்தோன்
திருமதிலில் ஓவியங்கள் பதிவுச் செய்து
   திகழ்கலைஞர் ஊரொதுக்கிப் பரிவு செய்தோன்
கருவண்டல் மண்புரளும் காவி ரிக்குக்
   கரைபோன்றோன், நீர்போன்றோன், சதய நாளான்.

ஆண்டுநின்ற இராசராசன் சிறந்து வாழ்ந்த
   ஆண்டாயிரம் ஆனதற்காய்த் தஞ்சை மண்ணில்
ஆண்டிருக்கும் அரசதனால் வேண்டப் பட்டு
   அமைத்தக் குழுச் செயலரானார் சா.க. அந்நாள்;
மீண்டுமந்த இராசராசன் வந்தான் என்று
   மேதினியோர் சிலிர்ப்படைய நடத்தி நின்றார்!
தாண்டவனாம் பெருவுடையார் வளாகம் தன்னில்
   தமிழ்மன்னன் திருவுடையான் தோன்றி வந்தான்!

## குடமுழுக்குத் திருப்பணிகள்

சதயவிழா நடத்திவைத்த சா.க. கையால்
   சால்பான பலகோயில் குடமுழுக்கும்
உதயவிழா ஆய்ச்சிறக்க நடந்த துண்டு!
   உற்றதெலாம் கற்றவர்க்கு ஓய்வா? பக்தி
பதியவிழா திருத்தணியில், சிக்கல் தன்னில்
   பழம்பெரிய திருஅண்ணாமலைத் தலத்தில்
நதியும் விழா நடத்துகின்ற கரூர்ப் பேரூர்
   நகரேசு காஞ்சியிலும் தொடர்ந்து செய்தார்;

தென்மொழியும் வடமொழியும் இரட்டைப் பிள்ளை
   தீந்தமிழே நெஞ்சிற்கும் உகந்த பிள்ளை
பன்மொழிகள் அறிந்தாலும் கம்ப நாடன்
   பைந்தமிழில் தான்தந்தான் மரபு காத்தான்.

நன்மொழிகள் பலகற்ற போதும் தாயின்
நாமொழியும் பக்திமொழி தமிழே ஆகும்!
தன்மையுடன் இவைசொல்லிக் கடைப்பிடித்து
தான் பொறுப்பை ஏற்றபோது சிறப்புத் தந்தார்!

### மலேயாத் தீர்ப்பு

மலேயாவில் ஒருசர்ச்சை; கோயில் அம்மன்
மாரியம்மன் எனச்சொன்னார்; சிலரோ இல்லை
சிலை வடிவம் திரௌபதியாம் அம்மன் என்றே
செலுத்திட்டார்; கணேச அண்ணன் அவர் அழைப்பில்
அலைகடலைத் தாண்டியுமோர் ஆய்வு செய்தார்
ஆதாரம் கூறியங்கு தீர்ப்பளித்தார்
கலை, சிற்பம் இலக்கியங்கள், ஆகமங்கள்
கணேச அண்ணன் சான்றுரைத்தார்! அறிவின் பீடு!

## புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு சாகித்ய அகாதமி விருது

வாழையடி வாழையெனப் பாரதிக்கு
வாரிசென பாரதிதாசன்அல் லால்யார்?
வேழமகன் பாரதியை விஞ்சும் வண்மை
வீறார்ந்த தமிழார்த்தான், பொதுமை சொன்னான்,
ஆழமுடன் பாடுவதில் அழகின் பெட்பை
அருவியெனக் கொட்டுவதில் ஈடில்லாதான்
வாழும்நாள் பெரியாரின் தொண்டராகி
வளர்கம்பன் இராமநெறி ஒப்பு கில்லான்.

தாசனுக்கும் கணேசர்க்கும் இந்தப் பார்வை
தன்னிலுண்டு வேறுபாடு; கணேசர் தந்த
தேசு 'தமிழ் தொண்டர் தொகை' வரிசை தன்னில்
'தென்கவி தோய் தாசர்தமிழ்க் கடிமை' என்றார்
தேசத்தின் இலக்கியத்தின் மதிப்பீடான
திறமைமிகு சாகித்ய அகாத மிக்கு
தாசனது பெயரைத்தான் பரிந்து ரைத்தார்!
சாகித்ய விருதுபெற்றார் தாசன் அன்று!

பழந்தமிழின் பெரும்புலவர் அடிமை யென்று
    பாரறியத் தொண்டர்தொகை சொன்ன அண்ணல்
எழுந்தமிழின் வித்தகர்க்கு, புதுமைப் பித்தன்
    எழில்கல்கி, மறைமலையார், ஆபிரகாமாம்
மொழிஇசையின் மூதறிஞர்க் கடிமை என்பார்
    முழுத்தகுதி 'தெ.பொ.மீ.'க் கடிமை என்பார்.
பழுதறியாப் பார்வையுள்ள கணேசர்க்கு
    பார்புகழும் சாதனையை இலக்க மாகும்!

## பிள்ளையார்பட்டித் திருக்கோயில் பணிகள்

பிறவிமுதல் தாய்தந்தை சுட்டிநின்ற தேவன்
    பிள்ளையார் பட்டிவளர் கற்பகமாம் தேவன்
ஒருகோயில் குடவரையில் உருவான தேவன்
    உலகமுதற் பிள்ளையார் படிவமெனக் கண்ட
பெருமைமிகு சிற்பநுட்பம் பேசிநிற்கும் தேவன்
    பீடோடு காரியங்கள் ஆட்சிசெயும் குடும்பம்
உரியநறும் கணேசர் உளம்பதித்த கோயில்
    உயர்ந்ததிருப் பணியையும் கணேசனார் ஏற்றார்!

அறநிலையை வரைமுறைக்குள் கொண்டுவந்த தோடு
    ஆலயத்தின் செல்வத்தை முதலீடு செய்தார்
பெருமதுரைத் திருநகரில் மனைகள்பல வாங்கிப்
    பிள்ளையார் பட்டிக்கே உரியதெனச் செய்தார்
அரியதொரு பெருங்கோயில் ஆகவளர்ந்த தெல்லாம்
    அண்ணலவர் நிர்வாக ஏற்றபின்னர் தானே!
உரியபல பூசைகாலம் உற்சவங்கள் வரிசை
    ஒழுங்குமுறை அவர்வழியில் இன்றுவரை நடக்கும்!

தொல்பொருள்சேர் ஆய்வறிஞர் பலருடனே ஆங்கு
    தோற்றியுள்ள கல்வெட்டை ஆய்வுகட்குட் படுத்தி
நல்மூதூர் வரலாற்றைத் தொகுத்தவரும் கொடுத்தார்!
    நகரத்தார் வரலாற்றோ டதனைஒப்பும் செய்தார்!
கல்சொல்லும் கதைசொன்ன தொண்டைமானோடு
    கணேசர்செய் ஆய்வுகளோ பேரளவு கூடும்
வல்லபெரும் பிள்ளையார் பட்டியதன் சரிதம்
    மல்லபெரு ஞானவள்ளல் கணேசரின் கொடையே!

வழிவழியாய்ப் பிள்ளையார்க்குப் பூசைசெய்து சிறக்கும்
    மறைமுதியோர், ஆன்மீகர் பிச்சையெனும் குருக்கள்
தெளிவுடனே கணேசரவர் அறிவுறுத்தல் படியே
    'சிவகாம பாடசாலை' நிறுவிடவும் செய்தார்
எழிலுடனே உலகெங்கும் ஆன்மீகப் பணியை
    எடுத்துவளர் குருக்களுக்கோ பாடமுறை திட்டம்
சுழிபோட்டுக் கணேசண்ணல் உரைத்தவழி வளர்ந்தார்!
    சுற்றிவரும் உலகனைத்தும் குருக்களவர் பணியே!

சுரண்டுதற்கே பொதுவாழ்வில் திரண்டுவரு வார்கள்
    சொத்ததனை விற்க, வாங்க தரகுபெறு வார்கள்
திரண்டசொத்தை ஆங்கிலேயர் பறிமுதல்கள் செய்தும்
    தேடிஒரு வருமானம் தொழில்எதுவு மின்றி
பெரும்வசதி தேடாமல் இருப்பதிலே வாழ்ந்த
    பிழையில்லா ஒழுக்கமுடன் தன்வாழ்வில் ஆழ்ந்த
அரும்மனிதர் கணேசனை அடிமனதில் கொண்டால்
    அந்தரங்கம் சுத்தியாகும் பிறவிப் பயன் கிட்டும்.

## சிற்பக் கலை தெரிசெம்மல்

செப்பரும் இலக்கி யங்கள்
    தெய்வமாம் பாசு ரங்கள்
ஒப்பிலா நடனம் பாட்டு
    ஒலி நாத சுரம் மேளம்
சிற்பங்கள் சித்தி ரங்கள்
    திகழ் கலைக் கட்டிடங்கள்
அற்புதக் கலையில் எல்லாம்
    அறிஞராம் கணேசர் தாமே!

எத்துறை இறங்கி னாலும்
    எவ்விதம் முரண்டி னாலும்
அத்துறை தன்னில் மூழ்கி
    ஆழ்கடல் முத்தெடுக்கும்
வித்தகர் கணேசர் ஒப்ப
    வேறுயார்? இருந்த தில்லை
சத்தியன் அவரைப் போல்
    சரித்திரம் படைத்ததில்லை

ஆன்மீக ஆகமங்கள்
அறிவியல் சோதி டங்கள்
வான்மீகத் தோடு கம்பன்
மாறுகொள் இடங்கள், தேர்தல்
தானறி அரசியல் சட்டம்
தமிழியல் கவிதை சந்தம்
தேன்சுவை நளபா கங்கள்
தேர்ந்தவர் வாழ்விற் கொண்டார்!

கம்பனில் மூழ்கி மூழ்கிக்
கம்பன் சொல் நயங்க ளெல்லாம்
அம்புவி தன்னில் ஆய்ந்தே
அவற்றினில் ஓட்பம் கண்டு
தம்புலன் அறிவி னாலே
தமிழர்க்கே ஆக்கித் தந்த
செம்பியன் கணேச வாழ்வு
செம்புலத் தமிழர் பேறு!

சிற்பிகள் ஸ்தபதி எல்லாம்
சேர்ந்தநல் உறவி னாலே
அற்புதம் கணேசர் தந்த
அறிவுடை அன்பி னாலே
நுட்பமாம் பணிகள் எல்லாம்
நொடிப்பின்றி வளர்ந்த தன்று
கற்பனை நிசமாய்ச் செய்தார்
கற்களைப் பேச வைத்தார்!

தஞ்சையிற் பெரிய கோயில்
தானமைத் தளித்த சிற்பி
குஞ்சர மல்லன் தச்சன்
குலத்திலே வந்த மக்கள்
பஞ்சமில் செட்டி நாட்டில்
பரம்பரைக் கலை வளர்த்தார்!
விஞ்சிய தில்லை யாரும்
வேந்தவர் சிற்பச் செம்மை!

**கணபதி ஸ்தபதி**

வாஞ்சையால் அண்ணா' ஆன
வைத்திய நாதர் தன்னால்
தீஞ்சுவைத் தமிழ்த் தாயின்
சித்திரம், ஐம்பொன் சிற்பம்
ஆய்ந்ததன் நுணுக்கம் கூறி
அமைத்தவர் கணேச அண்ணல்
ஓய்ந்திடாச் சிற்பி பிள்ளை
கணபதி ஸ்தபதி யாமே!

கணபதி சிற்பச் சான்றோன்
கணேச அண்ணல் தன்னை
தனதரும் 'ஞானத் தந்தை'
தானென வணங்கு கின்றார்!
மனதிலே கணேசர் எண்ண
மயனான ஸ்தபதி வாங்கி
நினைவிலே அதனைச் செய்வது
நிலைக்கவே வைத்திட் டார்கள்!

## முதல்வர் கலைஞரின் முதன்மை ஆர்வம்

கணேசர் கலையின் நாட்டம்
கம்பனில் ஞான ஊற்றம்
கணமேனும் மாறாச் செம்மை
கருணாநிதி முதல்வர் கண்டு
சிநேகிதம் கொண்ட தாலே
சிறப்புற்ற தமிழர் நாடு!
அநேகப் பணிகள் தொட்டே
ஆர்வத்தால் வளர்த்து வந்தார்!

அண்ணாவின் அடிதொடர்ந்து
ஆட்சியில் ஏறி வந்த
செந்நாவார் கலைஞர்
சிலம்பிலே வள்ளு வத்தில்
தன்னார்வம் வளர்த்து வந்து
தமிழகத்தில் அவைநி லைக்கப்
பொன்னான திட்டம் செய்தார்
புளகிதம் கணேசர் கொண்டார்!

## பூம்புகார் பத்தினிக் கோட்டம்

பூம்புகார் மேலை யூரில்
புனிதையாம் கௌரி அன்னை
தாம்பெரும் நிலங்கள் செல்வம்
சால்புறப் பெற்ற பண்ணை
பூம்புகார் நகர்ப் பிறந்த
பொற்கொடி கற்பின் செல்வி
தாம்தெய்வ மாக்கிக் கோயில்
தாபிக்க முயன்று வந்தார்.

கண்ணகி மரபைச் சேர்ந்தோர்
கணேசப் பெயரார் சான்றோர்
செந்நெறி அறிந்த செல்வர்
செம்மலை வேண்டிக் கேட்க
தன்னரும் புதல்வ ராச
சேகரன் அவரின் மூலம்
நன்னெறி காட்டக் கேட்க
நாயகர் அங்குப் போந்தார்

சிலம்பிலே ஆய்ந்து தோய்ந்து
தெய்வத்தின் படிமம் தேர்ந்து
இளங்கோவே கண்ட வண்ணம்
இறைவியாம் கண்ணகிக்கு
குலம்புகழ் கணேச அண்ணல்
குறித்திட்ட இலக்கணத்தில்
சிலையொன்றைச் செய்திட்டார்கள்
கணபதி ஸ்தபதி தானே!

கண்ணீரால் தீயை ஏற்றிக்
கயவரை அழித்த செல்வி
விண்ணேறிக் கொழுந னோடு
மேநிலை எய்தினாலும்
மண்ணிலே தெய்வ மாக
மங்கள தேவி என்றே
எண்ணியே வணங்கு கின்றேன்
இன்றும்நம் கேர ளத்தார்!

காவிரி கடலில் சேரும்
கடற்கரைப் பட்டி னத்தில்
தேவியார் கண்ண கிக்குச்
செய்த 'பத்தினிக் கோட்டம்'

ஓவிய மாக்க நெஞ்ச
உழைப்பினை கணேச அண்ணல்
மேவிய சிறப்பைக் கண்ட
மேலையூர் போற்றி நிற்கும்!

மாசிலாப் பண்ணை கௌரி
மாதா, ராசசேகர் பண்ணை
தாசிலாம் பண்ணை அன்று
தமிழரின் மூத்த தாயின்
ஆசியைப் பெற்றார், வாழ்வின்
அரும்பணி செய்தார், அன்னை
தேசுலாம் முகத்தைக் காண்போர்
சிலிர்த்திட்டு வணக்கம் செய்வர்!

கைவண்ணம் காட்டி நின்ற
கணபதிக் கலைஞன் தன்னால்
மெய்வண்ணம் கொண்டாள் தேவி
மீண்டது பழங்க லைகள்
செய்வண்ணம் இணையில் லாத
சிற்பிகை உளியால் என்றும்
தெய்வங்கள் உயிர்த்திருக்கும்
திளைத்து நம் கைகள் கூப்பும்

போதிலார் திருவாள் தெய்வப்
புகழுடைக் கண்ணகித்தாய்
மாதரார் மக்கள் கூடி
வயங்கிய தொழுது மேத்தும்
தீதறு தெய்வ மாகித்
திகழ்பத்தினிக் கோட்டம்
மூதுரை நல்ல போதில்
முதல்வரும் திறந்து வைத்தார்.

**புத்தெழுச்சி**

களைகட்டிக் கொண்ட தந்தக்
கடற்கரைப் பட்டினத்தில்
சளைக்காதான் நிலத்தை ஆண்டான்
சரித்திரம் புதிது செய்தான்

முளைவிட்ட தந்த நன்னாள்
    முத்தமிழ்க் கலையின் பொன்னாள்
விளைந்தது இசை விளைச்சல்
    பூம்புகார் புது வெளிச்சம்.

கண்ணியர் கணேசர் கண்ட
    கனவான தமிழ்த்தாய் கோயில்
மண்ணிலே காரை ஊரில்
    மண்டப வளாகம் தன்னில்
எண்ணிய வண்ணம் காண
    இயற்றியே முதல்வர் செய்தார்
புண்ணியச் சிற்பி கையால்
    பொலிந்ததே தமிழர் முற்றம்!

**தமிழ்த்தாய் கோயில்**
**கலைஞர் கால்கோள்**

கம்பன்அற நிலைநிறுவிச் சான்றோர் கூடி
    கம்பன்மணி மண்டபத்தின் வளாகத் தென்பால்
முன்பெங்கும் இல்லாத வண்ணம், வாழும்
    முத்தமிழாம் தாயினுக்குக் கோயில் கட்ட
தன்பெருவாழ் நாள் தாகம் நிறைவு செய்ய,
    தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கையால்
நன்புறவே கால்கோளும் செய்ய வேண்ட
    நாயகனாம் கலைஞரவர் சம்ம தித்தார்!

கடல்புகுந்த பூம்புகாரை மீண்டும் கண்டார்!
    கண்ணகியின் வரலாற்றைச் சிற்ப மாக்கி
இடம்பெரிய சிலப்பதிகா ரத்தின் கூடம்
    எழுப்பிவைத்தார்; எழில்மா தவிக்கே
நடம்புரிமுன் அலங்காரம் செய்யும் தோற்றம்
    நகநுட்பம், ஒய்யாரம், அணிகள், காதல்
மடந்தையவன் பாவனைகள் கல்லில் காட்டி
    மாகலைஞர் கணபதியால் செய்து வித்தார்!

பாவைமன்றம் இலஞ்சிமன்றம் நெடுங்கல் நிற்கும்
    பாங்கான வீரமன்றம்! கண்ணகித்தாய்
தேவமகள் தெய்வமெனக் காணும் தோற்றம்
    செய்துவைத்த பெருமையுண்டு கலைஞருக்கே

பாவலனாம் வள்ளுவர்க்குக் கோட்டம் கண்டு
பாங்காகக் கல்தேரை அங்கு கண்டு
காவலனாம் இராஜாஜிக்கு நினைவு மன்றம்
கணபதியால் செய்துவைத்தார் கலைஞர் அன்று!

அரசியலில் வேறுபாடு கொண்டிருந்தும்
அவர்தமிழ்க்குக் கலைதனக்குச் செய்த தொண்டு
வரலாற்றில் நிற்கிறது; கணேசச் செம்மல்
வரவழைத்தார் அவரினையே கால்கோள் செய்யத்
திரளாகத் திரண்டிருந்த மக்கள் முன்னர்
சீர்மைமிகு அறிஞர்முன், அமைச்சர் முன்னே
அரும்பணிகள் நகரவையின் சிதம்ப ரம்முன்
அடிக்கற்கள் நாட்டிவைத்தார் கலைஞர் அன்று!

கலைஞர்க்குக் கணேசர்மேல் நல்ல பற்று
கனிவுடனே 'பெரியவர்கள்' என்றே சொல்வார்
கலைப்படைப்பு மொழிப்புலத்தில் கலந்துகொள்ள
கணேசர்தம் கலந்துரைக்கு மதிப்பளிப்பார்!
தலையான தமிழ்க்கோயிற் பணிக்கே அன்று
தன்னரசால் செலவுகளை ஏற்றுக் கொண்டு
பலர்கூடி இழுக்கின்ற தேரை முன்னால்
பைந்தமிழின் கலைஞர்தான் வடம் பிடித்தார்!

## தமிழ்த்தாய்

மரகதப்பூப் பச்சைஉடை மாயக்காரி
மண்மங்கை கருப்பத்தில் முன்பி றந்தாள்;
கருகமணி நிறமுடையாள், ஆதிப் பெண்ணாள்.
கைகொட்டி வாய்பிதற்ற ஒலியின் கூற்றாய்
பெருகிவந்த தமிழச்சி! ஆதி நாக்கில்
பெய்மழையில் அடவிகளில் சூறைக் காற்றில்
உறுமிவந்த மிருகங்கள் நடுத்திரிந்த
உயிர்க்கூட்டம் ஒலித்திருந்த தமிழாம் தாயே!

குடகுமழைப் பெருமழையில் குதித்து வந்தாய்!
குறுமுனியின் இலக்கணத்தில் பதித்து வந்தாய்!
தொடருமொரு தொல்காப்பியன் முன்பி றந்தே
தொன்மக்கள் ஆதியினர் உணர்வுக் கூத்தே

படரும்அவர் காதலிலே பசிய முத்தம்
    பரிமாற அகமானாய்! பசிக்குச் சண்டை
இடுகையிலே புறமானாய்! எல்லா மாணாய்!
    எழில்ஐந்தி ணைகளிலே சிந்தாய் ஆனாய்!

கச்சணிந்த இளமாதர் நடனம் கொள்ளக்
    கருவண்டுக் கண்ணழகன் தாளம் போடத்
தச்சர்மகன் சிறுதேரை ஆங்கு செய்ய
    தமிழ்வேலன் குறத்தியுடன் குரவை ஆட
உச்சிவெயில் யானை மீது களிறடக்கி
    உடல்இறுக்கி மள்ளர்மகன் ஒலியெழுப்ப
அச்சமயம் அவர்பேசும் பேச்சாய் மாறி
    அமைந்திருந்த முதன்மொழியே! வணக்கம்! அம்மா!

நேர்த்தியாகப் புடவைதமிழ் நிலம்போல் காணும்
    நிலம்பதியாத் திருவடிதா மரையே தாங்கும்
கோத்திருக்கும் பாடகமும், சிலம்பு, மெட்டி
    கொள்கழுத்து சரப்பளிகள் மோதிரங்கள்
சேர்த்தஇரு கைக்கட்டு, மணிவடத்தில்
    கேயூரம், கன்னப்பூ, பிரபை, தோடு
நேத்திரத்தில் சாந்தஒளி திகழும் தெய்வம்
    நேரிழையாய்! தமிழ்த்தாயே! கோயில் கொண்டாய்!

ஓவியத்தில் அதைவடித்தார் உயர்ந்த சிற்பி
    உளித்தச்சர் வைத்திநா தஸ்தபதி; பின்னர்
தேவியுனை ஐம்பொன்னால் செதுக்கிக் காட்டி
    தில்லைநட ராசனொப்பப் படிமம் செய்தார்!
மேவியவர் தவத்துதித்த பிள்ளை, சிற்ப
    மேதையவர் கணபதிகற் சிற்பம் செய்தார்!
பாவிருந்து நாவிருந்து உயிரில் தோய்ந்து
    பதுமத்தில் எழுந்துவிட்டாய் கிரீடத் தோடு!

மொழிப்புலத்தின் ஒருமையிலே தொழுது போற்ற
    முகம்மதியர், கிறித்தவர்கள், சமணர், இந்து
எழிலான மதங்கடந்த தேவி ஆனாய்!
    எந்தமிழர் காரைநகர்க் கணேச மண்ணில்
அழியாத அறுகோணக் கோபு ரத்தில்
    அய்யன்வள் ளுவன்இளங்கோ கம்பனோடு
மொழியரசி நடுவிருக்க பரிவா ரத்தில்
    முன்னிருந்து வாழ்த்துகிறாய்! மூவாத்தாயே!

கனிவுடையான், துணிவுடையான் கணேச அண்ணல்
கார்வண்ண மேனியன் தீப் புகுந்த பின்னும்
தனிஉடமை கொண்டான் நெஞ்சா தனத்தில்
தானிருந்தே எமைஇயக்கும் ஞானமுற்றான்
குனிந்தறியான் வணக்கமுள்ளான் கம்பன் முற்றக்
கொடிபோன்றான், படிபோன்றான், எழுத்தும் ஆனான்
நனிவணக்க மண்டபத்துக் கோயில் தோய்ந்தான்.
நம்கம்பன் அடிப்பொடியே இங்கே ஆழ்வான்!

ஒலிவடிவாய் உன்காலம் எந்தக் காலம்?
உலகத்து ஆதிமனிதன்நா அசைந்த காலம்
வரிவடிவாய் நீவந்த தெந்தக் காலம்?
வரை கோட்டால், சித்திரத்தால் மனிதர் தம்மின்
உரைகளினைப் பதிந்தறியத் தெரிந்த காலம்!
உயர்சங்கப் பால்குடித்து வளர்ந்த பிள்ளாய்!
திரைகடலில் சீற்றத்தால் பிரிந்த மண்ணில்
திணையெழுதிப் பனையோலைக் கீற்றிருந்தாய்!

பரதவனின் படகுக்குத் துடுப்பாய் ஆனாய்!
பசுமைமிகு மருதவயல் நாற்றாய் ஆனாய்!
துரிதமிகு குறிஞ்சியர்க்கு முருகன் ஆனாய்!
துயர்கழித்த பாலையிலே நிழலாய் ஆனாய்!
சரிதம்வளர் சங்கத்தில் சமணத்தில்
தவப்பெரிய புத்தத்தில் சிவனில் மாலில்
பரிவோடு கருத்துரைக்கப் பகிர்ந்து கொண்டாய்!
பார்முழுக்க வள்ளுவனின் தேரி முத்தாய்!

முலையறுத்து நெருப்பேற்றித் தீயோர் தீய்த்து
முனியாதே அறவோரைக் காத்த கற்பின்
நிலைமகளின் சிலம்பிசையில் இளங்கோ ஆனாய்!
நிகரில்லா பலபுலவர் பகரவந்தாய்!
புலம்பெயர்ந்த கதைவாங்கித் தமிழைப் பெய்து
பூரித்த கம்பனிடம் ஊறிக் கொண்டாய்!
நிலம் சிறந்த காரைநகர்க் கணேச மண்ணில்
நிலவுலகோர் போற்றிசெய் கோயில் கொண்டாய்!

சித்திரத்தில் உனைப்பிடித்தார் அந்தச் செம்மல்
செகமான உலகத்தின் மீத மர்ந்தாய்!
கைத்தலத்தில் யாழ்கொண்ட ஏடும்கொண்டு
கவின் இயல் இசை நாடகத்தை முத்தரைத்தே

எத்திசையும் ஒளிபரப்பும் அறிவுத் தீயை
    எந்தமிழ்த்தாய் நாற்கையில் பிடித்திருப்பாய்!
உத்தரவு போடுவபோல் ஒயிலாம் தோற்றம்
    உள்மடக்கி ஒருகால், மறுகால் தொங்க வீற்றாய்!

மல்லிகைப்பூ மகரந்தத் தேனீக் கூட்டம்
    மதுகரங்கள் இசையொலிக்கும் பூங்காவோடு
செல்லமணிச் சிறார் சின்னக் கைகள் கூப்பி
    திருத்தொண்டர் தொகைகூறிப் போற்றும் பாடல்
வல்ல பள்ளி எழுச்சியினைச் சதாங் கத்தை
    வளர்கம்பர்க் கேதேனும் ஆகேனோ நான்
புல்லரிக்கும் கவிஞானக் கணேச வேட்கை
    பொருள்புரிந்து பரவுகிறார்! தமிழாய் போற்றி!

குலதெய்வம், விழைதெய்வம், கணியர் கூறும்
    குருமுதலாம் பலதெய்வம் வணங்கு வோரும்
மொழி, தெய்வம் ஆனகோயில் வணங்கினாலே
    முத்தான அறிவு ஞானம் கீர்த்தி தோன்றும்
செழிநகராம் காரையிலே கம்பன் வாழும்
    சிறப்பான வளாகத்தில் கணேச மண்ணில்
அழியாத தமிழ்த்தாயே! கோயில் கொண்டாய்!
    அகம் ஒடுங்கி அருள்வேண்டி வணங்கினேனே!

## 1974-1982 ஆரவாரமில்லாத அமைதிப் பணிகள்

மண்டபம் கட்டவும் மணித்தமிழன்னையின்
கொண்டதோர் கோயில் கூடக் கட்டவும்
மண்டிய விருப்பமே மனதில் ஓங்கிட
அண்டிய கட்சி அரசியல் ஒதுங்கினார்!

முனிவர் ராஜாஜி முன்னிருக் கையில்
நனிதன் நாட்டம் அவருக்குரைத்து
இனி 'நம் செயல்கள் இன்தமிழுக்கென'
நினைத்தபடியே நிலைமனதெய்தினார்

கம்பன் அறநிலை கண்ட உறுப்பினர்
நம்பி கணேசனை நாடி வருகையில்
கம்பனுக் காகப் பற்பல திட்டங்கள்
கம்பன் அடிப்பொடி கலந்தா லோசித்தார்!

கம்பன் அறநெறி உலகு பரவலால்
கம்பன் கழகங்கள் பற்பல எழுந்தன
கம்பன் தாய்க் கழகம் என்றவரும்
இன்புறச் சீதனம் ஈந்தே மகிழ்ந்தார்!

பாண்டி, நெல்லையில் பற்பல ஊர்களில்
ஆண்டகை கம்பன் அணிசேர் விழாவில்
வேண்டி அவர்கள் விரும்பிய வண்ணம்
பூண்ட விரதமாய் போயுடன் மகிழ்ந்தார்!

அம்பாரி யானையில் கம்பர் காதையை
கொம்பு மத்தளம் கோல இசையுடன்
இன்புறு பாண்டியில் எழுப்பிய விழாவில்
கம்பன் அடிப்பொடி கால்கோள் இட்டனர்!

கால்கோல் இட்டுக் கம்பன் கழகத்தில்
சாலச்சிறந்த சா.கணேசனார்
ஆழமாய் ஆற்றிய அழகிய உரையின்
கோலம் கேட்டனர்! கோந்தாய் ஒட்டினர்!

ஆண்டுதோறும் அன்பர் க.கு.கோ.
வேண்டி வைகுண்ட ஏகாதசி நாளில்
காண்டகைய நற்கம்பன் திருவிழாப்
போந்து அங்கேயும் பொலிவு செய்தார்.

அலைகடல் தாண்டி அருந்தமிழர் வாழும்
மலேசிய மண்ணில் கம்பன் கழகம்
விளைந்து வெங்கா, முதலிய அன்பர்கள்
அழைப்பை ஏற்றுத் தொடங்கியே வைத்தார்!

கங்கைக் கரையில் காவிரிக் கரையில்
எங்கெங்கு தமிழர் இனிதுறப் பெறினும்
அங்கெலாம் சென்றே அடியிட்டு வளர்த்தார்
சங்குமுக மானார் சா. கணேசனார்!

கட்டிடம் தொடர்பாய் அரசுத் துறைகளின்
கட்டளை பெறவும் முத்திரை பெறவும்
கிட்டிய நிர்வாகம் கீர்த்தி பெறவும்
பற்றுடன் அவரே பயணம் செய்தார்!

உள்ளாடை யோடு ஒற்றை வேட்டி
வெள்ளைத் துண்டு வேண்டிய தாள்களை
பெட்டியில் பையில் அடுக்கி அவரே
உற்றபேருந்தில் ஊர்செல்வார்கள்.

செல்வந்தர் நண்பர் தேடி வருபவர்
இல்வந்தால் அவரிடம் சிற்றுந்து கேட்பதோ
சில்லறை பெரிய உதவிகள் பெறுவதோ
வல்ல கணேசன் வாழ்வினில் இல்லை!

உலகம் வியந்த பெரும் பேரறிஞர்
பலகற் றறிந்து பயின்று கொடுப்பவர்
சில தலைவர்போல் அரசியல் அரங்கினில்
உள பதவிக்காய் ஓடிவரவில்லை!

கம்பர் மணிமண்டபம் வளாகம் அதனில்
கம்பன் கற்பகம் என்றொரு பள்ளி
கம்பன் அறநிலை சார்பினில் நடத்த
அன்புடன் சிவிசிடி அறிவுரை தந்தார்!

கற்கும் அகமாய்க் கற்பகம் ஆனதோ?
கற்பக மூர்த்தியால் கற்பகம் ஆனதோ?
விற்பன்னர் சா.க. விளைத்த வித்து
அற்புதமாய் வளர் ஆல்போல் உயர்ந்தது!

காலந் தவறாத கம்பன் விழாவும்
நாளும் புதிய கருத்துக் களோடு
ஆழம் அகல அறிந்த விற்பன்னர்
சீலம் சொல்ல சிறந்தோ ங்கியது!

ஆண்டுதோறும் கம்பன் மணிமலர்
நீண்டு உயர்ந்த நெறிசொல் கட்டுரை
மாண்புக் கம்பனின் மதிப்பினை விளக்கி
பூண்டு வந்தது புதுமை விதத்தில்.

குன்றக்குடியில் முருகன் திருவிழா
காரைக்குடியில் கம்பன் திருவிழா
பங்குனித் தீந்தமிழ்ப் பொங்கல் இட்ட
பங்கினைக் கம்பன் அடிப்பொடி தருவார்.

சொற்பொழிவாளர், கவிஞர், வல்லோர்
நற்றிறம் தன்னை நாட்டிப் பேசக்
கற்றவர் கூடும் கம்பன் மேடையில்
பெற்ற வாய்ப்பினைப் பெரிதாய்க் கருதுவர்!

அறிவு பரப்புதல், கம்பனில் ஆழ்தல்
விரியும் கட்டிட வேலைகள் நோக்கல்,
சிறிதும் ஓய்வில்லை செம்மல் அடியார்
அரிய தனிவாழ்நாள் சேவைகள் தொடர்ந்தார்!

பல்கலைக்கழகம், பயில் அரங்குகள்
நற்கலைவாணர் தந்திறம் ஆய்தல்
வல்ல மாணவர் ஆய்வுகள் தேர்தல்,
எல்லாரும் அழைத்தனர் இவர்உரை வேண்டி!

சொல்வதைப் போலச் செய்தவர் அவராம்
நல்லதை எண்ணியே நடத்தினர் அவராம்!
வல்ல கம்பனை வணங்கியே நாளும்
இல்லை இவர்போல என இருந்தவர் அவராம்!

இக்காலத்தில் இவர் எழுதிய கவிதைகள்
பொற்கா லத்தின் புதிய வார்ப்புகள்
திக்குகள் எட்டும் எட்டி அணைக்கும்
பக்குவ நெஞ்சின் பரிணாமங்கள்!

## கம்பனடிப்பொடியென்னும் கவிச் செல்வர்

தன்னை மிகைப்படுத்தித் தன்பெருமை முழக்கமிட்டு
முன்னிருந்து தனைக்காட்டும் முனைப்பில்லா சா.க.தான்
பன்னரிய பெரும் புலமை பாரித்திருந்தாலும்
அன்னவற்றை வெளிச்சமிட அவாத்துடிப்புக் கொண்டதில்லை!

கம்பனெனும் மாமலையில் கட்டுண்டு கிடக்கின்ற
கம்பன் அடிப்பொடியாய்த் தன்னையொரு சிறுதுகளாய்
அன்பனாய் இருந்திருக்க அவாவிவந்த உள்ளமின்றி
தம்பெருமை தான்உரைத்துத் தமுக்கடித்து வாழ்ந்ததில்லை

கம்பன் கவியரங்கில் கால்பதித்த கவிஞரெல்லாம்
தம்தம் கவிதையினைத் தமிழன்னம் அவர்க்கனுப்பி
முன்பின் இருந்திட்டால் முற்றும் திருத்திவிடக்
கம்பன் கழகத்தில் கட்டாயம், அதிகாரம்.

திருத்தங்கள் அவர்செய்து தெளிவுறுத்தும் ஞானத்தில்
பெருத்த கவிஞரெலாம் பிரமிப்பு அடைந்ததுண்டு
அருத்தம் சிறப்பாக்கி ஆய்வுக் குட்படுத்திக்
கருத்தைப் பதிவதுவே கணேசர்தம் நெறியாகும்!

பற்றிப் பல்பொருளைப் பாடியதாய்ச் சான்றுகள்
கிட்டவில்லை அடியேற்கு; கேண்மையுடன் அவர் பார்வை
உற்ற நறுங்கம்பன் உயர்தமிழின் முக்கவிஞர்
பெற்ற தமிழன்னையெனப் பெருமைகொளும் வரிசையிலே!

மலர்வணக்கம் என்பதினை மரபுவழிச் சடங்காக
கலை தெரிந்த கம்பனடி கருதியதே இல்லை; அதை
அலை அலையாய் தமிழ், கம்பன் அருமை பெருமைகளை
கலையாத தமிழ் மலரால் காணிக்கை செய்தார்கள்.

தமிழுக்குத் தொண்டுசெய்த தானையினர் வரிசையிட்டு
அமுதமெனும் அவர்க்கெல்லாம் 'அடியேன் யான்' என்றும்
தமது பெரும் பற்றைத் தமிழறிவை உரைத்த விதம்
இமயம் கீழிறங்கி இவர்காலில் தண்டனிடும்!

கோயில் கொலுவிருக்கும் கோலமகள் தமிழரசி
வாயில் இருந்தவளின் 'திருவடி முடிசூடி'
ஆய 'சதாங்கம்' அருளிவைத்த நிகழ்ச்சிக்கு
தாயும் மகிழ்ந்திறங்கித் தங்கமகன் நாவமர்ந்தாள்!

பெருவழக்கில் இல்லாத பெரும் பொருள்சொல் அருஞ்சொற்கள்
நறுக்கெனவே நேரடியாய் நவிலுகிற தனிப்புலமை
அருவியென, நதியெனவே அழகுநடை போடுவிதம்
மருவொன்றும் நடுத்தோன்றா மதிநுட்பச் செல்வாக்கு!

எடுத்தபொருளன்றி ஏதென்றும் தனிப்பேசாக்
கருத்துமழை, கைநுணுக்கம் செய்கின்ற சிற்பியாக
உருத்தெரியப் பொருளுக்கு உருவேற்றும் வடிவாக்கம்
விரித்துரைக்க நூறுவகை நுட்பமுள்ள பாச்சிறகு!

சந்தவகை, விருத்தவகை தக்கபடி கையாளும்
விந்தைகளை வார்த்தைகளால் விண்வில்லாய் உருவாக்கும்
அந்தமில் தமிழ்த்தாயின் திருக்காட்சி, தாலாட்டு
பந்தமில் தனித்தெய்வம் பரசுகிற முரசினொலி!

ஏதேனும் ஆகேனோ என எழிற் கம்பன் தனது
பாதசரம் தொட்டுருகும் பக்தரவர் நெக்குருகல்;

நாதமழை உலகிலுள நல்லபெரும் இலக்கியத்தில்
வேதமெனில், மேருவெனில், விமர்சகர்கள் ஒப்பிடுவர்.

தேசிக விநாயகராம் கற்பக மூர்த்தியைப்
பூசனைத் தெய்வங்களைப் பூசித்தே அவர் பாடல்
ஆசுகவி, ஞானமழை தான்பொழியும் கருத்துமுகில்,
வாசகம் போல் உருகவைக்கும் வாசகங்கள் அவருரிமை!

கம்பன், தேசமெனக் கம்பனடி மனம் வைத்துத்
தம்பெரிய தேடலெனத் தரணியிலே வாழ்ந்துவிட்டார்!
அனிபரிவர் கவியுலகில் ஆழமாய்ப் பதிந்திருந்தால்
மன், பெரிய பாரதிக்கு நிகராக நின்றிருப்பார்!

## 1982 இறுதியின் தொடக்கத்தில்

எழுபத்தி நான்கு வயது ஆனது அவர்க்கு
இளைத்து வந்தது உழைத்த மேனி
எண்பத் திரண்டு கம்பன் விழாவில்
தெம்பற்று இருந்தார் செந்தமிழ்ஞானி;
மரணத் தோழன் தழுவும் தருணம்
அருகில் வருவதை அறிந்தார் போலும்!
தொய்வின்றிக் கம்பர்பணி தொடர்ந்து சிறக்க
செய்த கோயில், மண்டபம் செம்மையுற
கம்பன் அறநிலைக் காப்பாளர் தம்மை
நம்பி அவரிடம் அதனை நவின்றார்!

எந்த நோய் எவரைத் தாக்கும்?
எந்த நேரத்தில் எவர் சாவு நேரும்?
விந்தையான இக்கேள்விகளுக்கு
விடை தெரிந்துவிட்டால்
விளங்காதா வாழ்வின் புதிர்கள்?

எண்பத்திரண்டு சூலைத் திங்கள் - மதுரை
எர்ஸ்கின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்
குறையவில்லை நோய்; கோவையில் நண்பர்,
கோவை நகரின் மத்தியப் பகுதியில்
கணேசர் கையால் இராஜாஜி சிலையைத்
திறக்கச் செய்த செல்வர்; ஜி.கே.எஸ்.சின்
ஜி.கே.என்.எம் மருத்துவமனையில்
சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்!

மனைவியார் மீனாட்சி ஆச்சி, மகள் மங்கையாச்சி
குடும்பத்தார்கள் கூட இருந்தார்கள்.
கம்பன் கழகக் கோவைச் செயலர்
அன்பர் இரா. நஞ்சுண்டன் புதல்வி
கம்பர் அருட்கவி ஐந்தையும் பாடினார்.

கணேசர் தலைமையில் அறிஞர் தொகுத்த
ஈடிணையற்ற கம்பனின் பதிப்பு
மர்ரே ராஜத்தின் மகத்தான கொடையால்
தமிழுலகு பெற்ற தரமான நூலில்
கணேசர் கையால் அடிக்கோ டிட்ட
கம்ப ராமாயணப் பாடல்களை அந்த
துன்பச் சூழலில் தொடர்ந்து பாடினர்
ஐம்பது ஆண்டு அன்புடை நண்பர்
ஆத்தங்குடிச் சுப்பையா செட்டியார்
இராம பஜனையை உருகிச் செய்தார்.

சூலைத் திங்கள் இருபத்தெட்டாம் நாள்
மாலை நேரம் அம்மகா மனிதனின்
பேச்சு நின்றது. மூச்சு நின்றது
வீச்சு மட்டும் இன்றும் நிறைந்தது.

காலக் கணக்கன் அன்று முடித்தான்.
கணேசக் கம்பனடிப் பொடி உயிரை

கணேசர் குடும்பமே மட்டுமல்ல
கம்பன் குடும்பே கலங்கி நின்றது.

கற்ற கல்வியும் காந்திய வாழ்வும்
முற்றுப் பெற்றன மற்றவை போலவே;

கம்பனும் சடையப்பனும் கண்ணீர் விட்டிருப்பர்

தொலைகள் நடந்த கால்கள்
துப்பாக்கி எதிர்த்த மார்பு
கயமையோடு குலுக்காத கைகள்
கம்பனையே துதித்த நெஞ்சம்

கவிதைகளையே கேட்ட காதுகள்
கடுஞ்சொல் சொல்லாத நாக்கு
நல்லதையே கண்ட கண்கள்
சிற்பங்களைச் சிநேகித்த அறிவு
கல்வெட்டுக்களைக் கணித்த கணக்கு

எல்லாம் தங்கள் இயக்கமற்றுப் போயின
செல்லப் புதல்வனை இழந்தாள்
செந்தமிழ்த்தாய்!

கணேசன் இறந்தார்
கம்பன் அடிப்பொடி இருந்தார்
இருக்கிறார்!

சுந்தரகாண்டம் படிக்கும் இடத்தில்
வந்திருப்பானாம் ஆஞ்சநேயன்!

கம்பன் கவிதை களிப்புறு நெஞ்சில்
கம்பன் அடிப்பொடி கலந்தே இருப்பார்!

அன்றையப் பொழுது
தேசபக்தன் உடல்
தீமூட்டப்பட்ட நேரம்
காரைக்குடி நகரமே கடையடைப்புச் செய்தது.

மக்கள் திரள் மண்டியிட்டு வணங்கியது
திக்குகள் கடந்த செல்லத் தலைவனை.

அரசாங்கம் துக்கம் தெரிவித்தது.

அனைத்துக் கட்சிகளும் அஞ்சலி செய்தனர்.

தமிழகத்தின் அறிஞர் திரண்டனர்
தமிழஞ்சலி செலுத்த

பத்திரிகையாளர் பத்திபத்தியாக
எழுதினர். அந்த
உத்தமத் தலைவனின் உயர்வுகளை

மாலை ஆறு மணிக்கு மகத்தானவரின்
இறுதி ஊர்வலம் என அறிவிக்கப்பட்டது.

நேரம் தவறாத நெறியாளர் அன்று
காலம் தவறாது காட்டுக் கேகினார்.

லௌகீகத்திற்கும் ஆன்மீகத்திற்கும் ஒரு
லட்சியப்பாலம் கட்டிக் கொடுத்தவர் அவர்

அனைவரிடம் அன்புகாட்டுவது அந்த லௌகீகம்
அநியாயங்கள் எதிர்ப்பது அந்த ஆன்மீகம்.

அந்தக் காலத்தில் அவரோடு வாழ்ந்த
எத்தனை பேர் அவரைப் புரிந்து கொண்டோர்?
எத்தனைபோர் அவர் ‘உள்’ தெரிந்தோர்?

பிழைக்கத் தெரியாதவர் என்று
பேசியவர் எத்தனை?
பின்னால் இருந்து சிரித்தவர் எத்தனை?

எங்கே அவர்கள்? எங்கே போயினர்?
எத்தனை பேரை வரலாறு தன்
புத்தகத்தில் பதிந்து வைத்தது
அந்தச் சூரியச் சுடர்முன் அவர்கள்
துகள்களாக எரிந்து போயினர்!

அவர் மட்டுமல்ல
அவரைப் போன்ற அபூர்வமான சிலரும்
காரிய சாம்ராஜ்யக் கண்ணாடி மூலமாய்ப்
பத்தாதவர் களாகவே பார்க்கப் படுகிறார்கள்!

காரைக்குடியில் இரு மாமனிதர்கள்
காரைக்குடியைப் பெரிது செய்தார்கள்
வள்ளல் அழகப்பர்
கம்பன் அடிப்பொடி சா. கணேசன்
இருவருக்கும்
ஊர்மக்கள் கூடி என்ன செய்தோம்?

ஊரின் ஒரு பகுதிக்கேனும்
சா.க. பெயரைச் சாற்றினோமா?

ஒரு தெருவாவது - அவர் பெயரை
உடுத்தி இருக்கிறதா?

ஊர்ப்பொது இடத்தில் அவர் சிலையை
உருவாக்கினோமா?

எதையும் விலை கொடுத்து
வாங்குகிற பொருளாதாரத்தில்
அவரின்
வேர்வையும் இரத்தமும்
வீணாய்ப் போனதா?

ஒரு கவிஞன்
மனிதத்தை நேசிக்கிற மரபில் வந்தவன்
பொதுமை உலகுக்கு பூபாளம் பாடுபவன்

அழுது கருகும் அவல மனத்தோடு
தொழுது கேட்கிறான்
திறந்து வையுங்கள்!
உங்கள் நெஞ்சின் உண்மையான பக்கத்தை
அதில்
வரைந்து வையுங்கள். அந்த
மகத்தான மனிதனின் மாறாத லட்சியத்தை.

காலம் அழிக்கலாம்.
கணேச உயிரை-ஆனால்
எதுவும் அழிக்குமா-அந்த
இலட்சிய நெறியை?



சித. சிதம்பரம்

## நன்றி

வரலாற்றுச் செய்திகளை வழங்கி உதவியவர்கள்
திருவாளர்கள்
டாக்டர் வை. கணபதி ஸ்தபதி,
டாக்டர் ஆர். நாகசாமி,
பூம்புகார் தாசில்பண்ணை இராசசேகரன்,
சா.க.வின் மருகர் பழ. சண்முகம்,
பிள்ளையார்பட்டி பிச்சைக்குருக்கள்,
என் அண்ணன் சித.பழநியப்பன்,
சக்தி அ. திருநாவுக்கரசு,
கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன்,
கோவை இரா. நஞ்சுண்டன்,
அபிசீனியா நா.பழநியப்பன்
அமராவதிபுதூர் வெங்காச் செட்டியார்,
நா. மெய்யப்பன்,
பழ. கருப்பையா,
சா.லெ.நா.சா. நாராயணன்,
சா.க.வின் பேரர் கம்பராமன்
கம்பன் கழகம் ஸ்ரீதர்
கா. நாகப்பன்
கனவுதாசன்
எம்.எஸ்.இராமநாதன்
மற்றும் பலர்



1972 கம்பன் மணி மண்டப திறப்பு ஆண்டில் நடந்த கவியரங்கில்
கவிஞர் கண்ணதாசன் தலைமையில் பிற கவிஞர்களுடன் சித. சிதம்பரம்
உடன் கவிஞர்கள் அரசி, மா. கண்ணப்பன், அப்துல் ரகுமான்,
சொ.சொ.மீ. சுந்தரம், மரியதாஸ், கம்ப ராமன், ம.வே.பசுபதி மற்றும் கவிஞர்கள்



கவிஞர் சித. சிதம்பரம்

# நூலைப் பற்றி

அப்பழுக்கற்ற மாமனிதர், இணையற்ற தியாகி, தமிழ்ப் பேரறிஞர், கல்வெட்டியலின் தந்தை, சிற்பம் முதலாய கலைகளை அறிந்த சிகரம், கம்பன் என்ற மகாகவியைத் தன் நெஞ்சக் கருவறையில் ஆராதித்து வணங்கிய அண்ணல், உலகில் முதன் முதலாகத் தமிழ்த்தாய்க்கு ஏற்ற கலைப்படிமம் தேர்ந்து, ஆலயம் கட்டிய கம்பனடிப்பொடி சா. கணேசனின் வாழ்வைக் கூறும் இந்த வரலாற்றுக் காவியம், அவர் பிறப்பு முதல் நிறைவு வரை சமூகப் பின்னணி கூறி, அவரது போராட்டம், தியாகம், சாதனை, வாழ்வின் சகல பகுதிகளையும் பின்வரும் தலைமுறை நோக்கிப் பேசுகிறது. சில கேள்விகளையும் எழுப்புகிறது. வித்தாக, வேராக விளங்கும் அவரைப் பற்றி விழுது விடும் நிகழ்கால, எதிர்காலத் தமிழர்கள் தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்டது இந்நூல்.

*ஜீவா காப்பியத்தில் அனைத்து வரிகளையுமே மேற்கோள் காட்ட வேண்டி வரும். நல்ல செந்தமிழ் நடை, கவிதை நயம், வரலாற்றுச் செம்மை, மிகைப்படுத்தாத கவிஞனின் எழுத்தோவியம் சித. சிதம்பரத்திற்கு நல்வாழ்த்துக்கள்.*

*தா. பாண்டியன் [ஜீவா காப்பியம் அணிந்துரையில்]*

*வியப்பாக இருக்கிறது இவரது விசுவரூபம் முழுவதும் பார்க்க முடியாதபடி ஒவ்வொரு அடியிலும் புதுமை- ஆழம்- ஆச்சர்ய வண்ணங்கள். சித. சிதம்பரத்தின் கவிதைகள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையின் வளத்திற்கு ஒரு முதலீடாக வருகின்றன.*

*கவிஞர் சிற்பி ['மௌனங்கள் மொழி திறக்கும்' முன்னுரையில்]*

*தமிழ் நயத்தால்- பாக்களில் உள்ள உயிரோட்டத்தால், அறிவு உரைப்புக்கு மார்க்சின் நிழலில் நிற்கிற நிலையால் சிதம்பரம் தகுதியானவன்! நிகழ்கால இலக்கிய உணர்வானவர்களால் படிக்கப்பட வேண்டியவன்.*

*பழ. கருப்பையா*

*விதம்பலவாம் பாவகையில் தேர்ச்சி பெற்றாய்*
*விளையாட்டாய்த் தலையாட்டும் வகையில் பாடும்*
*பதம் தேர்ந்தாய்; பளிங்கைப் போல் தூயநெஞ்சம்*
*பழமாகும்; உன்பாட்டு மருந்து மாகும்,*
*சதம்போடும் விளையாட்டு வீரன் போலத்*
*தமிழ்பாடும் பூங்குயிலே! தாயு மானார்*
*பதம்போல உன்பாடல் சொற்க ளெல்லாம்*
*பாராள கவியரசி வாழ்த்து வேனே!*

*மகாகவி அரசி [அர. சிங்காரவடிவேலன்]*

Printed by Poochcharam, Chennai - 94